517

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

…ர் 4 | 15 - 9 - 55 | இதழ் 1…



அறிவியல் அறிஞர்

பெஞ்சமின் பிராங்கிலின்

…ள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

பாடுவதில் தேறவில்லை!

அறிஞர் அண்ணா அவர்கள் பாட்டுப் பாடினார்கள்—அதுவும் பொதுமக்கள் முன்னிலையில் மேடையில் பாடினார்கள் என்றால், பலரும் வியப்படையவே செய்வர். ஏனெனில், அறிஞர் அண்ணா அவர்களுக்கு இசைபாட அவ்வளவு இனிமையாக வராது என்பதைப் பலரும் நன்கு அறிவர். அப்படியிருந்தும் அண்ணா அவர்கள் மூன்று தடவைகள் துணிவோடு பாட்டுப்பாடிக் காண்பித்திருக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் 1943-ஆம் ஆண்டில் 'சந்திரோதயம்' நாடகம் எழுதி, முதல் முயற்சியாக அவரே நடித்துப் பார்ப்பதற்கு, வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவத்திபுரம் என்ற பேரூரைத் தேர்ந்தெடுத்தார்கள். அங்கு முயற்சி வெற்றிகரமாக முடியவே பிறகு பிற ஊர்களிலும் அவர்கள் நடிக்க ஆரம்பித்தார்கள். வழக்கமாக நடித்து நடிப்புக்கலையில் தேர்ந்த மிகச்சிறந்த நடிகரைப்போல் நடிக்கும் ஆற்றல், அறிஞர் அண்ணா அவர்களிடம் உண்டு என்பதைப் பலரும் அறிவர். அண்ணா அவர்கள் நடிப்பில் தேறினார்கள், ஆனால் பாட்டுப்பாடுவதில் தேறவில்லை!

அண்ணா அவர்கள் 'சந்திரோதயம்' நாடகத்தில் பலரோடு சேர்ந்தும், தனியாகவும் மூன்று ஊர்களில் பாடிப் பார்த்தார்கள். அவர்களே உணர்ந்தார்களோ அல்லது அவரது 'இசை இனிமை'யைக் கேட்டவர்கள் விரும்பிக் கேட்டுக்கொண்டார்களோ, தெரியவில்லை, பாடுவதைப் பிறகு நிறுத்திவிட்டார்கள்!

அண்ணா அவர்கள் பாட்டுப்பாடும் அரிய காட்சியைக் கண்ட ஊர்கள் திருவத்திபுரம், சென்னை, திருச்சி ஆகிய மூன்று ஊர்கள்தாம்!

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

15 - 9 - 55 வியாழக்கிழமை

7-ஆம் ஆண்டு

17-9-55-ஆம் நாளோடு திராவிட முன்னேற்றக் கழகம், தனது முன்னேற்றப் பாதையில் ஆறு ஆண்டுக் காலத்தை முடித்துவிட்டு, ஏழாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

நாம் அன்று கிளம்பிய இடத்தையும், நாம் இன்று நிற்கும் இடத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அம்மம்மா! ஓர் புறம் வியப்பும் மற்றோர்புறம் மகிழ்வும் உண்டாகின்றன. 17-9-49-ல் நமது பயணத்தைத் துவக்கினோம். இருண்டவானம்! வெட்டவெளி! மழையின் தூற்றல்! அதுவரை இருந்த மாளிகையை விட்டு வெளியேறி, நாம் தனியாக நின்றோம்! கொட்டும் மழை! தலைமீது வீழ்ந்த நீரைத் தள்ளிக், கன்னத்தின்மீது வழிந்த நீரைத் துடைத்துப், புதிய பாதையில் நாம் பிரிந்து சென்றோம்! புதிய பாதையென்றால், அதற்கு முன் செப்பனிடப்பட்ட நெடுஞ்சாலை, இரு புறத்திலும் அடர்ந்த சோலைகள், குயில் கூவிட, மயில் ஆடிட, மல்லிகை மணம்வீசிட, தென்றல் பரவிட, இயற்கையும் செயற்கையும் ஒரு சேர்ந்து அமைத்திட்ட உல்லாச பாதையல்ல! நமக்கு வேண்டிய பாதையை நாமே அமைத்துக்கொண்டு முன்னேற வேண்டிய கட்டத்தில் இருந்தோம்! முன்னேறும் ஒவ்வொரு அடியும், நம்மால் அமைக்கப்பட வேண்டியதாயிற்று! அமைப்பதற்கான வசதிகள் நம்மிடம் இருந்தனவா? பணம் என்னும் உருளை இருந்தால் பாதை சிக்கிரத்தில் அமையும் சிலருக்கு! பணம் எவ்வளவு வட்டமாக இருக்கிறதோ, அதைவிடப் பெரிய வட்டத்தில் இருந்தது, நம்முடைய பணக் கணக்கு! இருண்ட நேரம்! கப்பியவானம்! கடுங்காற்று! கொடுமழை! மனதிலேவேதனை! எதிரே இடர்மிகுந்த பாதை! எவருக்கும் மலைப்பை உண்டாக்கும்! "முடியுமா நம்மால்?" சிலருடைய கேள்விகள்; "புதிய பாதையை அமைக்க ஏன் வீணாக் காலத்தைப் போக்க வேண்டும்? இவ்வளவு நாளும் நாம் அமைத்திட்ட பாதை, அதோ இருக்கிறது. வாருங்கள்! வழியில் மறைத்து நிற்போரைத் தூரத் தள்ளி, அதை நாம் கைப்பற்றலாம்!" திராவிட மறுமலர்ச்சிப் பாதையின் வழிகாட்டியாக, அமைந்த அறிஞர் அண்ணாவின் கண்ணியம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. காட்டு வழியில் நிற்கிறோம். எனினும் காட்டுக் குணம் படைத்தவர்களாக மாறிவிடக் கூடாது என்பது அவரது எண்ணம்.

திராவிடர்க் கழகத்தை விட்டு விலகி நிற்கும் முறையில் அறிஞர் அண்ணா அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், கைப்பற்ற வேண்டும் என்று துடித்தவர்களுக்கும், வேறு வழி செல்வது முடியாத காரியம் என்று கலங்கியவர்களுக்கும்—இருசாராருக்கும், அமைதியையும், உறுதியையும் அளிக்கும் விதத்தில் சில குறிப்பிட்டார்.

"அது பெரிய நஷ்டமல்ல—நமது மானம் நிலைக்கும்—இதைவிட உருவான முறையிலே நம்மால் இயக்கத்தை நடத்திச் செல்லமுடியும்.

- இயக்கம் நமது உழைப்பு.

இயக்கம் நமது வியர்வையிலும், கண்ணீரிலும் உழைப்பிலும் இருக்கிறது. அது எங்கும் போய் விடாது."

எவ்வளவு உறுதியான சொற்கள்! நம்பிக்கை தரும் மொழிகள்! அறிஞர் அண்ணா காட்டிய நம்பிக்கை—உறுதி வீண்போகவில்லை. கலங்கி நின்ற தோழர்கள் அறிஞர் அண்ணாவிடம் காட்டிய நம்பிக்கை—உறுதி—பணிவு வீண்போகவில்லை! புதிய பாதை அமைக்கும் வேலை ஆரம்பமானது, முன்னேற்றப் பாதை தொடங்கியது, முன்னேற்றக் கழகம் வளர்ந்தது! ஆறாண்டுக் காலத்தில் வெகுதூரம் முன்னேறி வந்துள்ளோம்; மாற்றார் கண்டு மலைக்குமளவுக்கு, நாம் கண்டு மகிழுமளவுக்கு!

புதிய பாதை வகுத்தபொழுது, புதிய கழகம் அமைத்தபொழுது, தடைகள் உண்டாக்கினோர் பலர். ஆகாது இந்த அப்சாரம்! என்று கூவினர் சிலர்; சகுனத்தடை எனச் சிலக் கோட்டான்கள் கூவின; அரசியல் ஆந்தைகள் அலறின; வௌவால்கள் சில அங்குமிங்கும் வட்டமிட்டன. "பாதை அமையாது! காலிடறிப், பள்ளத்தில்போய் வீழ்ந்து விடுவீர்கள்!" என்று பயமுறுத்தினர் சிலர்.

கருத்துக் கதிர்

அடிகளாரின் 'அர்ச்சனை'

தமிழ் அர்ச்சனை இயக்கத்தை ஆரம்பித்து படாத பாடுபடும் அடிகளார் தனது இயக்கம் குறித்து ஒரு விளக்கம் அளித்துள்ளார், திருவல்லிக்கேணி கலாச் சாரக் கழகத்தில் அண்மையில் பேசுகையில் :

தமிழ், தமிழன் என்ற பெயரால் நாத்திகம் பரப்பப் படுகிறதாம், தமிழ் அர்ச்சனை இயக்கம் அந்த நாத் திகத்தை பூண்டோடொழிப்பதற்காகத்தான் உரு வாக்கப்பட்டதாம் ; வடமொழியைப் புறக்கணிப்பதற் காகவல்லவாம்—கூறியுள்ளார் அடிகளார்.

அடிகளாரின் தமிழ் அர்ச்சனை இயக்கத்தைக் கண்டு, திராவிடர் இயக்கம் அடிகளாரின் புரட்சியுள்ளத்தை வியந்து வரவேற்றது. ஆனல் தமிழ் அர்ச்சனையோடு பிரச்சினை தீர்ந்துவிடவில்லை. ஆலய நுழைவை வரவேற்றதுபோல். தமிழ் அர்ச்சனையையும் தடை கள் உடைபடவேண்டும் என்று கருதியதால் வர வேற்றது.

எந்தத் தமிழ் ஆத்திகத்தை வளர்க்க, கம்பர், சேக் கிழார். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருநாவுக் கரசர் ஆகியோரால் பயன்படுத்தப்பட்டதோ அதே தமிழ்தான் இன்று, நாத்திகர் என்று கூறப்படும் திராவிட இயக்கத்தவரால் பயன்படுத்தப்படுகிறது.

ஆகவே நாத்திகம் பரவுவதற்கு தமிழ்ப் பற்று காரணமாகாது. அர்ச்சனை இயக்கத்தாலும் அதை ஒழித்துக்கட்ட முடியாது. ஆத்திகத்தின் அலங் காலங்களே நாத்திகம் தோன்றக் காரணமே தவிர, ஒருமொழி காரணமாகாது.

"பாதை அமைப்பது என்றால் சுலபமா னதா ! அதற்கும் பக்குவம் வேண்டாமா ? அனுபவம் அவசியமில்லையா ? அதிலும் ஐந்தாறு சிறுவர்களைக் கூட்டிக்கொண்டு, ஒரு சோம்பேரி உங்களை ஏமாற்ற நினைத்தால், நீங்கள் அதை நம்புவதா?" நம்பிக்கை உருவங் களாக தங்களைத் தாங்களே அடிக்கடித் திருத்திக்கொள்ளும் சிலர் கூறினர்.

பாதை அமைத்திடும்பொழுது ஏச்சுகள், பேச்சுகள், ஏளனங்கள், இழிவுகள், எச்சரிக்கை கள், பயமுறுத்தல்கள் ஏராளமாகவந்தன. காட்டுப்பாதையில், கர்த்தபங்கள் முழங்குவ தும், ஓநாய்கள் ஊளையிடுவதும், காட்டெருமை கள் கடுங்குரல் எழுப்புவதும் எதிர்பார்க்க வேண்டியவையே. அதிலும்காட்டைத்திருத்தி, நல்ல பாதையும், நாடும் சோலையும் அமைக்கச் சிலர் வருகிறார்கள் என்றால், காட்டின் இருளில், புதரில் பதுங்கியிருந்து லாப வேட்டையாடியவர்களுக்கு அச்சந்தானே ! எனவே காட்டாட்சிபுரியும் வேங்கைக் குணம் படைத்தோர், நமது ஆக்கப்படையின் மீது பாய்ந்து, இரத்தம் குடித்ததுண்டு, உயிர் களைப் பலிகொண்டதுண்டு. வியர்வை சிந்தி நாம் அமைத்த தூய பாதையில் இரத்தம் கொட்டியது; நமது ஆருயிர்த் தோழர்களின் பிணங்கள் விழுந்தன. தாக்குதலும், பயங்கர மும் நம்மீது வீசப்பட்டபோதிலும், இலட்சியப் பாதையில் நாம் துவங்கிய பயணம் நிற்க வில்லை. இன்பத் திராவிடம் என்ற உயர் உச்சியை அடைய நாம் செல்கிறோம். நமது முயற்சி தோல்வியடையாது.

" இயக்கம் நமது உழைப்பு !" அறிஞர் அண்ணா அன்று கூறியது—எழுதியது, நமது இயக்க வரலாற்றில் அழியாத சொற்களாகி விட்டன. நமது உழைப்பு—நாம் சிந்திய வியர்வை, நாம் சிந்திய இரத்தம், காட்டிய உறுதி, காட்டிய கட்டுப்பாடு, கண்ணியம்— இயக்கத்தை வளர்த்து வந்திருக்கிறது. ஐந்தாறு சிறுவர்களா ? அறியாத பாலகர் களா ? என்று ஏளனம் புரிந்தோர் ஏமாற்ற மடையுமளவுக்கு ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட இயக்கம், — மாபெரும் குடும்பம் இன்று வளர்ந்து, இலட்சியப்பாதையில், " வாழ்க வாழ்க வளமார் எமது திராவிடம் !" என்ற வழிநடைப்பாட்டை இசைத்து, ஆறாண்டுக் காலத்தைக் கடந்து, ஏழாவது ஆண்டில் இளமையும் முறுக்கும், எழிலும் வலிவும் பொருந்தி விளங்குகிறது.

புதிய பாதை அமைத்திட முன்வந்த முதல் வர்—நமது குடும்பத்தின் தலைவர்—அன்பால் அண்ணா, அறிவால் அறிஞர்—அவருக்கு நமது வணக்கமும் வாழ்த்தும் உரியவாகுக! குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்களுக்கு, இயக்கத்தின் மற்ற தோழர்களுக்கு நமது வாழ்த்துகள்; உரிமைகலந்த அன்புரைகள் !

இயக்கம் நமது உழைப்பு ! அது வளர்வதாக !

வாழ்க திராவிடம் !

வாழ்க கழகம் !

வளர்க !

ராம மந்திர மகிமை!

"மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த பிப்பாளி என்ற கிராமத்தில் 'ராமாயண மண்டல்' என்ற மத சங்கத்தின் தலைவர் பகவத் சிங் யாதேவ், தம்முடன் ஆறு சீடர்களை அழைத்துக் கொண்டுபோய்க் கோவா எல்லையில் இருந்து கொண்டு 108 தடவை ராமாயண சுலோகங்களையும் ராமநாம மந்திரத்தையும் படிப்பார்" என்றும்,

"ராமாயண சுலோகம் படிப்பதினால் கிளம்பும் சப்த அலைகள், தாரக மந்திரத்தின் புனிதத்தன்மையைச் சுமந்துகொண்டு, கோவாப் பகுதிக்குள் நுழைந்து, அங்கு நிலவிவரும் கெட்ட எண்ணங்களை மாற்றிக், 'கோவா' பிரச்னை சுலபமாகத் தீர்ந்துவிட உதவிசெய்யும்" என்று ராமாயண மண்டல் தலைவர் நம்புகிறார் என்றும்,

"போர்ச்சுகீச வாசிகள் கனவிலும் கண்டறியாத பல சாதனைகளை 'ராமமந்திரம்' சாதித்திருக்கிறது. இவ்விதம் ராமாயணச் சுலோகங்களை உச்சரிப்பதால் ஏற்பட்டுள்ள பலன்களைப் பற்றிப் பழைய இந்துச் சாத்திரங்களில் விரிவாக எழுதிவைக்கப்பட்டுள்ளன. எனவே ராமாயண சுலோகங்களைச் சொல்லி ஏன் கோவாவில் போர்ச்சுகீச சிப்பாய்களின் ஆயுத பலத்தை முறியடிக்கக்கூடாது" என்று அவர் கேட்கிறார் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்திய எல்லையில் இடம்பெற்றிருக்கும் போர்ச்சுகீச அரசாங்கத்தை அப்புறப்படுத்த கடந்த பல நாட்களாகப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. தனிப்பட்டவர்களும், பல அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் கோவா எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து, சத்யாக்கிரகம் செய்து சிலர் உயிரை இழந்தார்கள். பலர் அடிபட்டுப் படுகாயமடைந்தார்கள்—இப்பொழுது இந்திய அரசாங்கம் இவ்விதம் சத்யாக்கிரகிகள் எல்லை தாண்டி 'அந்நியரின்' இடத்தில் பிரவேசிப்பது சர்வதேசச் சட்ட திட்டங்களுக்கு மாறுபட்டதாகும் என்ற விளக்கத்தைத் தந்து, இனிமேல் சத்தியாக்கிரகம் யாரும் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொண்டுள்ளது. ஆனால் நிலைமையில் வெற்றி ஏற்படாதது குறித்துக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இந்திய அரசாங்கம் இனிக் கலங்க வேண்டிய அவசியமில்லை! இதோ வழிகிடைத்துவிட்டது! ராம மந்திர சுலோகம் படித்து போர்ச்சுகீச அரசாங்கத்தின் மனதை மாற்றும் இந்த முயற்சி ஆபத்து இல்லாதது. இந்திய அரசாங்கம் அநுமதி கொடுக்கக்கூடிய அளவில் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. ஏற்படக்கூடிய பலனில் பலருக்கு சந்தேகம் இருந்தாலும் முயற்சியை தடுக்க யாரும் முன்வர மாட்டார்கள். எனவே கோவா போராட்டம் வேறுகட்டதை அடையும். அலைகடல் எழுப்பும் ஒலியைப்போல் இந்திய எல்லை யோரங்களில் கோவாப் பகுதிகளின் திக்கை நோக்கி ராமநாமத்தை உச்சரிக்கும் ஒலிகிளம்பி, தன் ஆத்ம சக்தி வேகம் கொண்டு, உள்நுழைந்து அங்கு அசையாமல் ஆயுதத்தை ஊன்றிக்கொண்டு நிற்கும் அரசாங்கத்தின் மனதை மாற்றி வேலை செய்யும்.

மேலே கண்ட செய்தியின் சாரம் கூறுகிறது :—மந்திர ஒலியின் சப்த அலைகள் கோவாவின் உள் நுழைந்து—அங்கு நிலவி நிற்கும் ஆணவ ராணுவாதிகாரத்தை—மாற்றும்—அதாவது கெடுதலை மாற்றும்—இதனின்றும் பெறப்படுவதாவது : நீதிக்கு மாறுபட்ட எண்ணங்களை மந்திர வலிமை மாற்றும்.

இப்பொழுது நமது சந்தேகம் என்னவென்றால் : ஆயுதம் தரித்த போர்ச்சுகீச சிப்பாய்களின் மனதைமாற்றக்கூடிய வல்லமை ராம—நாம மந்திரத்திற்கு இருக்குமானால், அந்த மந்திரத்தைக் கொண்டு ஏன் நம்மிடையே நிலவிவரும் கெட்ட—பொது நீதிக்கு மாறுபட்ட முயற்சிகளைத் தவிர்க்கக்கூடாது.

கடை வீதிகளில் கொள்ளை லாபம் சிலர் சம்பாதிக்கிறார்கள். நியாயமான லாபத்தைத் தாண்டி, அமிதலாபம் சம்பாதிக்க முற்படுவது பொதுவான நீதிக்கு விரோதம். எனவே, ஒரு பஜனை கோஷ்டி அநுதினமும் கடைவீதிகளில்

திருத்தம்

இவ்விதழில் 20-ஆம் பக்கம் இரண்டாவது கலம் 4-வது வரியில் அப்பா என்பதற்கு அம்மா என்று திருத்தியும், 21-ஆம் பக்கம் முதல் கலம் 18-வது வரியில் சதாசிவம் என்பதற்கு கருணாகரன் என்று திருத்தியும் படிக்க வேண்டுகிறோம். பிழை ஏற்பட்டதற்கு வருந்துகிறோம்.

ஆசிரியர்.

ராம—நாம பஜனைபாடி 'கள்ள மார்க்கெட்' வியாபாரிகளின் மனதை மாற்ற முயற்சிக்கலாம்.

அரசாங்க அலுவலகங்களில் லஞ்ச ஊழல் இருக்கிறது. ஆங்கிலேயனின் ஆட்சி காலத்தில் அரசாங்க நிலையங்களில் உள்ளே புகுந்து குடியேறிய லஞ்சப் பேய்—இந்தியா தன் சுதந்திரத்தைப் பெற்று, "சத்தியமே ஜயம்" என்ற உண்மையை உலகத்திற்கு எடுத்துக்காட்டும் அசோகச் சக்கரம் பொறித்த—மூவர்ணக் கொடியை பறக்கவிட்டவுடன்—உத்தமர்களின் ஆட்சியில் உயிர்பிழைக்க முடியாது என்று பயந்து வெறியேறி ஓடிவிடுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஆபீசுகளில் மூலை முடுக்குகளில் பதுங்கி நின்று, சேவகர்கள், கீழ்த்தர குமாஸ்தாக்கள் இவர்களிடம்மட்டுமே இதுகாறும் உறவுகொண்டிருந்த லஞ்சப்பேய், இந்தியாவின் சுதந்திரத்திற்குப்பின், தானும் கொஞ்ச சுதந்திர உணர்வுபெற்று, உயர்தர அதிகாரிகளாயிற்றே என்ற பயம் கொஞ்சமும் இல்லாமல்—ஆயிரக்கணக்காக சம்பளம்வாங்கும் அதிகாரிகளிடமும் சினேகம் உண்டாகி,—பெரிய இடத்து சாவகாசம் கிடைத்ததின் காரணமாக இப்பொழுது கீழ்த்தரத்திலுள்ளவர்களை இந்த லஞ்சப்பேய் கைவிட்டுவிட்டதாகக் கேள்வி—அரசாங்கம் ஒப்புக்கொள்ளும் வகையில் செய்திகள் வருகின்றன. இவ்விதம், அரசாங்க சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படாமல் அலைகிறது லஞ்சப்பேய். இதை ராம நாம உச்சாடணத்தைக்கொண்டு ஒழித்துவிடக்கூடாதா?

மது அரக்கனை ஒழித்து அதன் காரணமாக கோடிக்கணக்கான ரூபாய்களை இழந்தது அரசாங்கம். தற்சமயம் சாராயம் தயாரிப்பது சாதாரணக்குடிசைத்தொழிலாகி சட்டத்துக்கு அப்பாற்பட்டு, போலீசின் "கண்காணிப்பை" மீறி, வளர்ந்துவருகிறது.

—இதை ஒழிக்க மேற்படி ராம நாம மந்திரத்தை ஏன் உபயோகிக்கக்கூடாது?

ரயில் நிர்வாகத்தில் எல்லா அதிகாரிகளுமே லஞ்சம் வாங்குகிறார்கள்—இது அரசாங்கம் நியமித்த விசாரணைக் குழுவின் முடிவு.

ஒரு பஜனை கோஷ்டி—ஒரு ரயில் வண்டியில் இருந்துகொண்டு, ராமனுடைய திவ்விய நாமத்தை—இனிய கானமாக பஜனைசெய்ய, இதன்மூலம் எழும் சப்த அலைகள் ஒவ்வொரு ரயில் நிலையங்களிலும், கூட்ஸ் ஆபீசுகளிலும் நுழைந்து, அங்குள்ள சில்லரை லஞ்சங்களை ஏன் ஒழிக்கக்கூடாது? ரயில்வே சிப்பந்திகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்ற கெட்டபெயரை ஏன் மாற்றக்கூடாது?

ராம நாமத்தை பஜனைசெய்து கோவா பகுதியிலுள்ள சிப்பாய்களின் மனதைமாற்ற முடியும் முற்காலங்களில் பல பெரிய சாதனைகள் நடைபெற்றிருக்கின்றன என்றால், ஏன் இந்த முயற்சி எல்லாவிடங்களிலும் செய்யக்கூடாது?

இவ்வித மந்திர—முயற்சிக்கு முழுப்பலன் கிடைக்காது. சொற்ப பலன்தான்கிட்டும் என்றாலும்—முயற்சிப்பது வீணாகாது. அதற்கென அரசாங்கமும் செலவிடலாம். அது ஒரு நஷ்டமாகாது.

மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த பிப்பள்ளி கிராமத்திலுள்ள, 'ராமாயண மண்டல்' சங்கத் தலைவர் பகவத் சிங் யாதேவ்—தான் செய்ய முயற்சிக்கும் 'புதிய—மந்திர—சத்தியாக்கிரக முறை' பயன் தரும் என்று நம்புகிறார் என்று செய்தி கூறுகிறது.

இந்த செய்தியைப் பத்திரிகைகளில் படித்து நம்பக்கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள் நமது நாட்டில்.

பழைய நூல்களில் எழுதப்பட்டவைகள்—புராணங்களில் நடந்ததாக வர்ணிக்கப்பட்டிருப்பவைகள்—இன்னும் அவர் பாடியது இவர் பாடியது—ஆகிய எல்லாம் மகிமை உற்றவைகள். அவைகளை அப்படியே நம்புவது தான் பண்பு—பகுத்தறிவென்று சொல்லிக்கொண்டு இக்கால ரீதியில் அவைகளை அலசிப்பார்ப்பது அழகாகாது—என்று கூறும் கூட்டம் தமிழ் நாட்டில் எப்பொழுதும் உண்டு. தற்சமயம் இந்தக் கூட்டத்தை வளர்த்துவர பெருமுயற்சி நடந்து வருகிறது, கலாச்சாரம் கலைவளர்ச்சி, மத ஒழுக்கம் என்ற பல பெயர்களால்.

ஆனால் உண்மை அறிவொளி என்றும் மங்காது.

எனவே, பகுத்தறிவின் உயர் தரத்தை உணர்ந்த ஒவ்வொருவரும் மேலே விவரிக்கப்பட்ட ராம—நாம—பஜனை முயற்சியை—எள்ளி நகையாடுவார்கள் என்பது உறுதி.

உத்திரப் பிரதேசத்தின் ஓரிடத்திலிருந்து ஆரம்பமாகும் இந்த பயித்தியக்கார முயற்சி மற்ற இடங்களுக்கும், குறிப்பாக நமது தமிழ் நாட்டில் பரவாமல் இருக்குமாக!

'மந்திரத்தால் மாங்காய் விழாது' என்பது நமது பழமொழி.

இந்தியாவின் மொழிப் பிரச்சினை

[ஐராவதி கார்வே (Irawati Karve) என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'மொழிப் பிரச்சினை' (The Language Problem) என்ற அருமையான கட்டுரையே, சிறிது சுருக்கமாக, மொழிபெயர்ப் பாகக் கீழே தரப்படுகிறது. இந்தியாவின் மொழிப்பிரச்னையைத் தீர்க்க அவர் கூறும் விளக்கங் களும், முடிவுகளும் கருத்து நிறைந்தவைகளாகும். புதிய எதிர்காலத்தை உருவாக்க அவரது கருத்துக்கள் பெரிதும் பயன்படுவனவாகும். (ஆ-ர்.)]

அவசர—அவசியத் தன்மைகள்

பல்வேறுபட்ட மொழிகளைப் பேசும் பல மாநில அரசுகள், ஒன்றுசேர்ந்த ஒரு இணைப் புப் பேரரசுதான் **இந்தியா** என்பது.

இந்தியாவின் மொழிப்பிரச்சினை பல்வேறு தன்மைகளை உள்ளடக்கிய ஒன்ருகும். அவற் றில் மிக அவசர—அவசியமானவைகளாகக் கருதப்படும் தன்மைகள் கீழ் வருமாறு :

(1) மாநிலத்திற்குள்ளே நடைமுறை வழக்காற்றிற்கும், கல்விப் பயிற்சிக்கும் உரிய மொழியாக எந்த மொழியைக் கொள்ளுவது ?

(2) மாநிலங்களுக்கிடையே கொள்ள வேண்டிய நடைமுறை வழக்காறு, மத்தி யப் பாராளுமன்றம், மத்திய அரச அலு வலகம். அகில இந்திய அரச அலுவல் கள் ஆகியவற்றிற்கான மொழியாக எந்த மொழியைக் கொள்ளுவது ? வேறு சொற்களால் குறிப்பிட வேண்டுமானல், இந்தியப் பேரரசின் (யூனியன்) மொழி யாக எந்த மொழியைக் கொள்ளுவது ?

(3) வெளியுலகத் தொடர்பு பற்றி நடைமுறைவழக்காற்று மொழியாகஎந்த மொழியைக் கொள்ளுவது ?

பல்வேறு மொழிகளை உள்ளடக்கிக்கொண் டிருக்கும் பிற உலக நாடுகளைப் பார்த்து இந்தியா தன்னுடைய மொழிப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியாதா? என்ருல், இந்தியாவின் பண்பாட்டு—அரசியல் நிலை, பிற பல்மொழி நாடுகளோடு முழுக்கவும் ஒப் பிட்டுப்பார்க்கக் கூடியதாக அமைந்திருக்க வில்லை ; எனவே அந்நாடுகளின் எடுத்துக் காட்டு நமக்குப் பெரிதும் பயன்படுவதாக இருப்பதில்லை. மூன்று முக்கியப் பல்மொழி நாடுகளை எடுத்துக்கொண்டு ஆராய்ந்து பார்த்தால், இந்தியா அவற்ருேடு ஒட்டிவரா தத் தனித்தன்மை பூண்டு விளங்குவதை எளிதில் கண்டுகொள்ளலாம்.

அமெரிக்காவின் நிலை

அமெரிக்கா, உலகிலுள்ள கிட்டதட்ட எல்லா மொழிபேசும் மக்களையும் தன்பால் ஏற்றுக்கொண்டிருந்தாலும், அது ஒரு மொழி நாடாகக் காட்சியளிக்கிறது. அமெரிக்காவும் இந்தியாவும் வரலாற்று—பண்பாட்டுத் துறை களில், எவ்வளவு வேறுபாடுகளைக் கொண் டிருப்பவை ஆகும் என்பதை விளக்கத் தேவையில்லை ; யாவரும் எளிதில் உணர்ந் திருக்கவே செய்வர். அமெரிக்கா முதன் முத லில் முழுக்க முழுக்க ஆங்கிலேயரின் ஆதிக் கம் நிறைந்த குடியேற்ற நாடாக இருந்தது. டச்சு—பிரெஞ்சு — சுபெயின் நாட்டவர்கள் சிறிதுசிறிது குடியேறியிருந்தனர் என்ருலும், மேற்கு நோக்கி மேலும் பரவத்தொடங்கிய ஆங்கிலக் குடியேறிகளுக்குள், அவர்களெல் லாம் நாளடைவில் கலந்து—மங்கி—மறைந்து போயினர். அண்மையில் குடியேறிய மக்க ளினங்கள், அமெரிக்கா ஒரு ஆங்கிலம் பேசும் நாடு என்று நிலைநாட்டப்பட்ட பிறகே புகுந் தவர்களும். புதிதாகக் குடியேறிய மக்கள் சிறுசிறு தொகையினராக இருந்தாலும், அவர்கள் அமெரிக்காவை வாழ்வதற்கேற்ற பாதுகாப்பான இடமாகக் கருதிச் சென்ற தாலும், அவர்கள் எல்லோரும் அங்கு நிலை நின்ற ஆங்கிலமொழியை விருப்பத்தோடும், ஆர்வத்தோடும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தனர். அமெரிக்காவில் பல்வேறு

மொழித்திட்டுகள் ஆங்காங்கு அமைந்திருக்கின்றன என்றாலும், அவைகள் பன்னெடுங்காலமாகவே அரசியல் மேம்பாடு பெறும் நோக்கத்தைப் பெறாமலேயே இருந்துவருவதால், அவைகள் பிரச்சினைக்குரியவைகளாகக் கருதப்படவே இல்லை. ஆங்கிலமே அமெரிக்காவின் அரசியல் மொழியாகவும் பொது மொழியாகவும் இருக்கும் நிலையை, அமெரிக்க வரலாறு, சிறு எதிர்ப்புக்கும் இடமில்லாத வகையில், நீண்டகாலமாகவே உருவாக்கி வந்துவிட்டது.

சுவிட்சர்லாந்தின் நிலை

சுவிட்சர்லாந்து மூன்று மொழிகளைக் கொண்டிருக்கிறது. மூன்று மொழிகளுக்கும் சம அரசியல் உரிமை வழங்குவதன்மூலம் அது தன்னுடைய மொழிப் பிரச்சினையைத் தகராறுக்கு இடமில்லாத வகையில் தீர்த்துக் கொண்டுவிட்டது. [அண்மையில் ரோமன் (Romansch) மொழியையும் நான்காம் மொழியாகச் சேர்த்துக்கொண்டுள்ளது.] இம்முறையை அது எளிதாகக் கடைபிடிப்பதற்குக் காரணம், அது இந்தியாவிலுள்ள பதினன்கு மொழிகளைப் போலில்லாமல், மூன்று மொழிகளை மட்டுமே கொண்டிருப்பதாகும். சுவிட்சர்லாந்து மிகச் சிறிய நாடாக இருப்பதால், பல்வேறு மொழிப்பிரிவினரும் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடுகிறது; அதனுல் ஒரு மொழிப்பிரிவினர் மற்றொரு பிரிவினரின் மொழியை எளிதில் கற்றுக்கொள்வதற்கு இயலுகிறது. எனவே மூன்று மொழிகளும் அரசியல்—பொதுமொழிகளாக நடமாடுகின்றன.

உருசியாவின் நிலை

உருசியா பல மொழிகளைக் கொண்ட ஒரு பெரிய நாடாகும். அந்நாட்டவர்கள் உருசிய மொழியைக் கூட்டாட்சி மொழியாக வைத்துக் கொண்டும், ஒவ்வொரு மாநிலத்தின் மொழியையும் அந்தந்த மாநிலத்தின் நடை முறை வழக்காற்று மொழியாகவும், அந்தந்த மாநிலத்தின் கல்வி பயிற்றுவிக்கும் மொழியாகவும் ஆக்கிக்கொண்டும் தங்கள் மொழிப் பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மேற்பார்வைக்கு உருசியாவின் நிலைமையும், இந்தியாவின் நிலைமையும் மொழிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் ஒன்றுபோலவே தோன்றும். ஆனல் ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கப் போனல், உண்மையில், உருசியாவின் நிலைமைக்கும் இந்தியாவின் நிலைமைக்கும் அடிப்படையான வேற்றுமைகள் நின்று நிலவக் காணலாம். அவற்றிலிருந்து இந்தியாவுக்கு உருசியாவை எடுத்துக் காட்டாகக் கொள்ளுதல், அடிப்படையிலேயே பொருந்தி வராது என்பதை உணரலாம்.

உருசியாவில், உருசிய மொழி பேசும் மக்கள், பல நூற்றுண்டுகளாகவே ஆட்சி ஆதிக்கம் செலுத்தும் மக்களாக இருந்து வருகிறார்கள். உருசிய மொழி உயர் கல்விக்கேற்ற, பண்பாடு செறிந்த, இலக்கியங்கள் நிறைந்த, அறிவியல் நிரம்பிய மொழியாக அன்றும் இன்றும் இருந்து வருகிறது. உருசியாவில், இன்றும் அரசியல் கருத்துக்களைக் கோர்வைப்படுத்தி அழகுற எடுத்துச் சொல்லுவதற்கு ஏற்ற மொழியாகப் பயன்படுத்தப்படுவதும், அதற்கேற்றவாறு பக்குவப்படுத்தப்படுவதும் ஆன மொழி உருசிய மொழியேயாகும். காரல் மார்க்சும், ஏங்கெல்சும் தங்கள் கருத்துக்களைப் பெரும்பாலும் செர்மனி மொழியில் வெளியிட்டிருந்த போதிலும் லெனின்—புகாரின்—சுடாலின் ஆகியோர் தங்கள் கருத்துக்களை உருசிய மொழியில்தான் எழுதி வெளியிட்டனர். உருசியாவின் அரசியல்—வரலாற்று—பண்பாட்டு மொழியாகப் பண்டு தொட்டு வளர்ந்து வரும் மொழி உருசிய மொழியாகும். வரலாற்றுச் சிறப்பிலும் இலக்கியச் செறிவிலும் உருசிய மொழிக்கு ஈடாகவும், எடுப்பாகவும் சொல்லக்கூடிய வேறோர் மொழி; உருசியாவில் இல்லவே இல்லை. எனவே, அந்த மொழி உருசியாவின் மத்திய ஆட்சி மொழியாகவும், பொதுமொழியாகவும் வந்தது என்றால் அது இயற்கைக்கு ஒத்த முறையேயாகும். உருசியாவின் ஆட்சியாளர்கள் மிக்கப் பெருந்தன்மையோடு, பல்வேறு வட்டாரங்களின் வட்டார மொழிகளை வளர்க்கவும், அந்தந்த வட்டாரங்களில் அந்தந்த வட்டார மொழிகளிலேயே உயர்தரக் கல்வியைப் பயிற்றுவிக்கவும் இயன்ற வழிவகைகளை யெல்லாம் செய்தனர்—செய்து வருகின்றனர். உருசியாவில் உருசிய மொழிக்கு ஈடு எடுப்பான வேறோர் மொழி இல்லாத காரணத்தால், அதனையே உருசியாவின் பொதுமொழியாகவும், மத்திய ஆட்சி மொழியாகவும் ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலை பிற மொழியினர்க்கு ஏற்பட்டது. அது குறித்து எந்த மொழியினரிடத்தும் முணு முணுப்பு ஏற்படவில்லை.

வடக்கத்திய சமத்கிருத மொழிகள்

அதேபோது இந்தியாவை உற்றுக் கவனித்தால், வடக்கத்திய சமத்கிருத மொழிகள்

எல்லாம் ஏறத்தாழ ஒரே சமநிலையில் இருப்பனவாகும். அவைகள் எல்லாம் சுமார் ஆயிரம் ஆண்டுகளாகத்தான் தனித்தனி மொழியாகத் தோன்றி வளர்ந்து வருகின்றன. அதற்கு முன்னால் அவைகளெல்லாம் பிராக்கிருத மொழிகளின் கூறுபாடுகளாக விளங்கிவந்தன. ஒவ்வொரு மொழியும் சென்ற ஆயிரம் ஆண்டு காலமாகத்தான் தமக்கேயுரியத் தனித்தனி இலக்கியங்களை வளர்க்கத் தொடங்கின. அவைகளில் வங்காளி, மராத்தி, குசராத்தி ஆகிய மொழிகள் சிந்தி—பஞ்சாபி—இராசதானி—இந்தி—ஒரியா போன்ற மொழிகளைக் காட்டிலும் வளர்ச்சியிலும் சரி, வளத்திலும் சரி, இலக்கியச் செறிவிலும் சரி மிகமிகச் சிறந்தனவாகும். இந்தி மொழியினைப் பேசும் மக்களின் எண்ணிக்கை பிற எந்த ஒரு மொழி பேசும் மக்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் சற்று மிகவானதாக இருந்தபோதிலும், அது கொண்டிருக்கும் இலக்கியங்கள் அளவிலும் சரி, அருமையிலும் சரி மிகமிகத் தாழ்ந்த தரத்தினவாகும். வடநாட்டு மொழிப் பகுதிகளில் இந்தி மொழி, சமயவியல்—தத்துவவியல்—அரசியல்—இலக்கியவியல் ஆகிய துறைகளில் உணர்ச்சி தரும் ஒரு மொழியாக என்றும் இருந்ததாகச் சொல்லவே முடியாது.

தென்னாட்டுத் திராவிட மொழிகள்

தென்னாட்டைப் பொறுத்தவரையில் எடுத்துக் கொண்டால், திராவிட மொழிகள் மிக உயர்ந்த இலக்கியங்களை மிக நீண்டகாலமாகவே கொண்டிருக்கின்றன. தமிழ்மொழி, இற்றைக் கால மேற்கு ஐரோப்பிய மொழிகளிலுள்ள இலக்கியங்களைக் காட்டிலும் மிகப் பழைமையான இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இற்றைக்கால வட இந்திய மொழிகளைக் காட்டிலும் மிக நீண்டகாலத்திற்குமுன்பே தமிழ்—தெலுங்கு—கன்னடம் ஆகிய மொழிகள் வளர்ச்சிபெற்றிருந்தன. அவைகள் விறுவிறுப்பான இலக்கியவழி வழிமுறையைக் கொண்டிருப்பதோடு, அகில இந்தியாவையும் கவர்ச்சிபடுத்தியச் சமய—தத்துவ இயக்கங்களின் வழிவழி முறையையும் கொண்டிருக்கின்றன.

இந்தி ஏற்புடைத்தான பொதுமொழி அல்ல

இப்படிப்பட்ட சூழ்நிலைகளைக்கொண்ட இந்தியாவோடு உருசியாவை ஒப்பிட்டுப் பார்ப்பது எந்த வகையிலும் பொருந்திவராது என்பதை எவரும் உணர்ந்துகொள்ளலாம். பெருமை கொள்ளத்தக்க இலக்கிய—அரசியல் உயர்வைக் கொண்டிருக்கும் இந்தியாவின் மொழிகள், அவைகளைவிட எல்லாவகையிலும் குறைபாடுடைய இந்தியைத் தமக்குச் சமமாகக் கொள்ள ஒருபொழுதும் ஒருப்படா; இந்திக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தையும் முதன்மையாதிக்கத்தையும் ஏற்க மனம் கொள்ளா.

ஆனால் உருசியாவிலோ உருசியமொழி மற்ற எல்லா மொழிகளைக் காட்டிலும் மிகச் சிறந்து விளங்குகிறது. உருசியமொழியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பிற உருசியநாட்டு மொழிகள் தரத்தில் மிகமிகக் குறைந்திருப்பதோடு, சில எழுதும் வழக்கு அற்றே வாழுகின்றன. அவைகள் உருசியமொழியைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்வதிலே அருவருப்போ முணுமுணுப்போ கொள்ள வழி ஏதுமில்லை. அவைகள் உருசியமொழியை விரும்பி ஏற்றுக்கொள்ளும் அவசியமான நிலையிலிருந்தன. எனவே உருசியமொழி, உருசியாவின் மத்திய ஆட்சிமொழியாகவும் பொதுமொழியாகவும் ஆவதில் தகராறு ஏதும் ஏற்படவில்லை.

உருசியாவின் மொத்த மக்களில் உருசிய மொழி பேசும் மக்களின் விகிதாசாரம், இந்தியாவின் மொத்த மக்களில் இந்திமொழி பேசும் மக்களின் விகிதாசாரத்தைவிட மிகவாகும் என்பதும் உணரவேண்டியதொன்றாகும்.

இந்தியாவில் இந்திமொழி பேசப்படும் பகுதியைக்காட்டிலும், பிறமொழி பேசப்படும் பகுதிகள் உயர்வாகவோ அல்லது அதற்குச் சமமாகவோ தான் இருந்து வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாகவும் பொது மொழியாகவும் ஆக்கப்படுமேயானால், இந்தி பேசும் பகுதி அரசியல்—பண்பாட்டுத்துறைகளில் ஏராளமான வசதிகளைப் பெறவும், பிறபகுதிகள் அவ்வசதிகளைப் பெறமுடியாமல் வாடவும் ஆன நிலைமை ஏற்பட்டுவிடும். இது இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத எல்லா மக்களுக்கும் இழைக்கப்படும் அநீதியாகத்தான் சென்றுமுடியும். ஒரு திறமையும் இல்லாத இந்தி நாளடைவில் எல்லா வசதிகளையும் வாய்ப்புகளையும் பெறும்; அதற்கு எதிராகச் சொல்லப்படும் எந்த ஒரு சொல்லும் பெரிய அரசக் குற்றமாகக் கருதப்படும் என்ற நிலைதான் ஏற்படும். இந்தியை மதிக்கக்கூடிய ஒரு மொழியாகவோ, வழிகாட்டும் மொழியாகவோ, துணைபுரியும் மொழியாகவோ பிற

இந்திய மொழி எதுவும் ஏற்றுக்கொள்ளாது என்பது வெளிப்படை.

ஆங்கில மொழி

அகில உலகப் பொதுமொழியாக விளங்கும் ஆங்கிலம், இந்தியாவில் சென்ற 200 ஆண்டு காலமாக ஆட்சி மொழியாக இருந்ததால், அதனோடு பழகும் நல்ல வாய்ப்பு இந்திய மக்களுக்கு முன்கூட்டியே ஏற்பட்டுவிட்டது. இற்றைக் காலத்திற்கேற்ற எண்ணத்தையும், நடவடிக்கையும் இந்திய மக்களுக்குத் தந்ததும்-தந்துவருவதும் ஆனமொழி ஆங்கிலமேயாகும். இந்தியாவின் விடுதலைப் போராட்டம், இந்திய அரசியலமைப்புச் சட்டம், மக்களாட்சிக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுதல், எல்லா மக்களுக்கும் சமத்துவம் வழங்குதல், நல்வாழ்வுக்கு உறுதியளிக்கும் அரசு, சமதர்மம் போன்ற பலவும் ஆங்கில ஆட்சியில் ஆங்கில மொழியின்மூலம் கிடைத்த பலன்களேயாகும்.

ஆங்கிலம், இப்பொழுது இந்தியாவில் கற்றறிந்தவர்களின் மொழியாகவும், மாநிலங்கள் ஒன்றுடன் ஒன்று பேசிக்கொள்வதற்கான மொழியாகவும் இருந்துவருகிறது. உயர்தரக் கல்வி பயிலுவதற்கேற்ற பாடமொழியாக இந்தியா முழுவதும் ஒரு தன்மையாகக் கையாளப்பட்டு வருகிறது. புதிய கருத்துக்களையும்—பண்பாடுகளையும் அறிந்துகொள்வதற்காகவும், அரசாங்க அலுவல்களில் அமர்வதற்காகவும் ஆங்கிலம் பலரால் கற்றுக் கொள்ளப்பட்டது. இப்பொழுது பார்த்தால், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள கற்றறிந்தவர்கள் தங்கள் தங்கள் தாய்மொழியோடு ஆங்கிலத்தையும் நன்கு கற்றறிந்து வைத்துள்ளார்கள். ஆங்கிலத்தின்மூலம் பெறப்படும் அரசியல்—சமூகக் கருத்துக்கள்தாம் நம்மை செம்மைப்படுத்தின-செம்மைப்படுத்தி வருகின்றன என்பதை யாரும் மறுத்தற்கில்லை.

மாநில ஆட்சி மொழி

ஒருவருக்குப் பாடம் பயிற்றுவிக்கும் மொழி அவர் தம் தாய் மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்ற கருத்தில் யாருக்கும் வேறுபாடு இருக்கச் செய்யாது. இளையோரும் சரி முதியோரும் சரி கல்வி பயில அவர் தம் தாய்மொழிதான் ஏற்ற பற்றுக்கோடாகும் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். உருசியாவில் எழுத்து வழக்கற்றிருந்த மொழிகளில் கூட எல்லா நிலைக் கல்வியையும் போதிக்கலாம் என்ற நிலைக்கு அவைகளை வளர்த்திருக்கும்போது, நன்கு வளர்ந்துள்ள இந்திய மொழிகளில் பாடம் சொல்லிக் கொடுப்பது என்பது அவ்வளவு கடினமானதாக ஆகிவிடாது. போதுமான பாடப் புத்தகங்கள் இல்லை என்ற குறைபாடு ஒரு பெருங் குறைபாடு ஆகாது. அந்தக் குறைபாட்டை எளிதில் விரைவில் போக்கிக் கொள்ளலாம்.

ஆகவே ஒவ்வொரு மொழிவழி மாநிலத்திலும் ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழகப் பட்டப் படிப்பு வரையில் வட்டார மொழியான தாய் மொழியே பாடம் பயிற்றுவிக்கும் மொழியாக இருக்கலாம். பல்வேறு மொழி பேசும் கலப்படப் பகுதிகளிலும், கலப்பட நகரங்களிலும், வட்டார மொழியைத் தவிர்த்த வேறு மொழிகளிலும் பாடங்கற்பிக்க போதுமான வசதிகளைச் செய்து தரலாம். **ஒவ்வொரு மொழிவழி மாநிலத்திலும் அந்தந்த நிலத்திற்குரிய மொழியே அந்தந்த மாநில ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்.** மாநில ஆட்சியைச் சேர்ந்த அலுவலாளர்கள் அத்துணைப் பேரும் அந்தந்த மொழியையும் ஐயந்திரிபற அறிந்தவர்களாக இருக்கவேண்டும். மாநிலத்திற்குள்ளே நடைமுறை வழக்காற்றிற்கும், கல்விப் பயிற்சிக்கும் உரிய மொழியாக எந்த மொழியைக் கொள்ளுவது என்ற பிரச்சினையே மேற்கண்டவாறு தீர்த்துக் கொள்ளலாம்.

பொது மொழி

நமக்கு இந்திய யூனியன் ஆட்சியை நடத்த ஒரு மொழி தேவைப்படுகிறது; மாநிலத்தோடு மாநிலம் தொடர்பு கொள்ள ஒரு மொழி தேவைப்படுகிறது; உலகின் பிற நாடுகளோடு தொடர்பு கொள்ள ஒரு மொழி தேவைப்படுகிறது; இந்த மூன்று தேவைகளையும் சேர்த்து நிறைவேற்றித் தரக்கூடிய ஒரே மொழி இன்றைய நிலையில் ஆங்கிலந்தான். எனவே அகில உலகப் பொதுமொழியாக விளங்கும் ஆங்கிலமே இந்திய யூனியன் ஆட்சி மொழியாகவும், இந்திய மாநிலங்களின் பொதுமொழியாகவும் கொண்டால் எல்லாப் பிரச்சினைகளும் எளிதில் தீருவனவாகும். [திராவிடக் கூட்டாட்சி ஏற்படும்போது திராவிடக் கூட்டாட்சி மொழியாகவும், திராவிடப் பொது மொழியாகவும் ஆங்கிலம் இருக்கலாம்—(ஆ.ர)] அப்படிப் பார்க்கும்போது இந்தியாவில் எல்லோரும் இரண்டு வகை மொழிகளை மட்டுமே கொண்டால் போதும் என்ற நிலை ஏற்படும்: (1) மாநிலங்களின் மொழிகள்

(குறிப்பிடத்தக்க 14 மொழிகள்) (2) யூனியன் மொழி (அதாவது ஆங்கில மொழி).

மேற்கண்ட முறைப்படி பார்ந்தால், இந்தியாவிலுள்ள பெரும்பாலோரும் தாங்கள் தங்கள் தாய்மொழி அல்லது வட்டார மொழியோடு ஆங்கில மொழியைக் கட்டாயமொழியாகக் கற்றுக் கொண்டால் போதும் என்ற நிலை ஏற்படும். ஆங்கிலமொழி நடுத்தரப் பள்ளியில் துவங்கிப் பல்கலைக் கழகம் வரையில் இரண்டாவது கட்டாய மொழியாகப் பயிற்றுவிக்கப்படவேண்டும்.

ஆங்கிலத்தைப் பொதுமொழியாக ஏற்றுக் கொள்ளுவதென்றாலும், இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களும் உலக அரசியல் தொடர்பு, உலக வாணிகத் தொடர்பு, உலக அறிவியல் தொடர்பு ஆகியவற்றை நேரிடையாகப்பெற வாய்ப்பு ஏற்படும்; வாய்ப்புகளும், வசதிகளும், சலுகைகளும் ஒன்றுக்குக்கூட மற்றொன்றிற்குக் குறைய என்ற வேறுபாடில்லாமல் எல்லா மாநிலங்களும் சமநிலையை அடைய முடியும்.

ஆங்கிலம் நமது தேசிய வாழ்வில் இடம் பெறும்; நமது தாய்மொழியால் செய்துதர முடியாதவற்றைச் செய்துதரும் அளவுக்குத்தான் இடம் பெறும்; பண்பாட்டு வளர்ச்சியைப் பொறுத்தவரையில் வட்டார மொழியோடு போட்டிபோடும் இடத்தைப் பெறாது. **நமக்கென்று இருக்கும் தேசியமொழி நமது தாய்மொழியாகும்; தேவைக்கென்று எடுத்துக்கொள்ளும் மொழி ஆங்கில்மொழியாகும்!**

சர்க்கரையைவிட அதிக இனிப்பு தரும் பொருள்

இனிப்பைச் சேர்க்க நாம் இப்பொழுது உபயோகிக்கும் சர்க்கரையை விட 300 மடங்கு அதிக இனிப்பபைத் தரவல்ல பொருள் ஒன்றை, அமெரிக்காவில் தேசிய உடல்நலக் கழகத்தார் (National Institutes of Health)ஆராய்ச்சிசெய்துகண்டுள்ளனர். ஸ்டெவியோஸைடு (Stevioside) என்று அதற்குப் பெயர். இப்புதிய பொருள் தென் அமெரிக்காவிலுள்ள பராகுவே நாட்டில் வளரும் புதர்ச்செடி ஒன்றிலிருந்து கிடைக்கின்றது. கசக்கி உலர்த்தப்பட்ட இச்செடியினது இலைகள், பல நூற்றாண்டுகளாக பராகுவே நாட்டினரால் தேனீருக்கு இனிப்புச் சேர்க்கும் பொருளாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்டெவியோஸைடு இச்செடியில் அதிகத் திட்பப்பெருக்குடன் 100-க்கு 7 பங்கு காணப்படுகிறதாம்.

புதிய ஆராய்ச்சியின்படி இப்பொருளினால் உலகெங்கும் சர்க்கரைத் தொழிலுக்கு நலிவு ஏற்படுமென்று எண்ணமுடியாது. ஏனெனில் ஸ்டெவியோஸைட்டை அச்செடியிலிருந்து எளிதில் பிரிக்க இயலாது. அப்படிப் பிரித்தாலும் அதற்கு ஆகும் செலவு மிகவும் அதிகமாகும். மேலும் இச்செடியின் வளர்ச்சி பெருமளவில் பயிராக்க இயலாததாக இருக்கிறது.

சில ஆண்டுகளுக்குமுன் வாணிபநோக்குடன் பராகுவேயில் பல இடங்களில் பெருமளவிற்கு இச்செடிகள் பயிராக்கப்பட்டன; ஆனால் பலன் கிடைக்கவில்லை; திட்டங்களெல்லாம் பாழ்பட்டன. விந்தையான செடி என்பதற்காகப் பலர் ஆர்வங்கொண்டு தனிப்பட்ட தோட்டங்களில் பயிராக்கி வருகின்றனர். வேறு உருவான பலன் ஏதும் கிடையாது.

ஸ்டெவியோஸைட் நமக்குக் கிடைக்கும் இயற்கைப் பொருள்களில் அதிக இனிப்புத்தரும் பொருளாகத் தோன்றுவதால், அது அறிவியல் முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

அன்னை கருதியது என்னை?

[எழினி]

கடற்கரைச் சோலை! கண்ணுக்கினிய காட்சியாக இருந்துவருகிறது! நாள்தோறும் அங்கு சென்றுவரத் தலைவியும் தோழியும் தவறுவதில்லை!

கடலையடுத்து உப்பங்கழிகளும் அவற்றையடுத்து அலை ஒதுக்கிய மணல் முட்டுகளும், அவற்றை யடுத்து மலர் பூத்துக் குலுங்கும் மரஞ்செடி, கொடிகள் நிறைந்த மாமலர்ச் சோலையும் காண்போர் உள்ளத்தை ஈர்க்கும் தன்மையனவாக இருந்துவருகின்றன. குளங்களிலுள்ள இறு மீன்களைத் தின்றுவிட்டு, சுறுமீன்களைக் கொத்தித் தின்னவேண்டிப் பறவைகளின் கூட்டங்கள் உப்பங்கழிகளிடத்து வந்துசேரும். நீண்டு திரண்ட தண்டினையும், நுண்ணிய பலவாகிய பசிய இலைகளையுமுடைய நெய்தற்கொடிகள் அவ்வுப்பங்கழிகளில் படர்ந்துகிடக்கும். கண்களைப் போன்ற நெய்தற்பூக்கள் அக்கொடிகளில் நாள்தோறும் மலர்ந்து காணப்படும்.

இத்தகைய இயற்கைக் காட்சிகளைக் காணவும், மலர்களில் மொய்த்துக்கிடக்கும் வண்டுகளையும் விரட்டி சோலை மலர்களைக் கொய்யவும், நெய்தற் மலர்களை அரிக்கவும், வெண் மணற்பரப்பில் ஆட்டம்ஆடி, ஓட்டம்ஓடி, பாட்டுப்பாடி, பந்து ஆடி மகிழவும் தலைவியும் தோழியும் நாள்தவருமல் மாலைப்பொழுதுகளில் அங்குச் செல்லுவது வழக்கம். இருட்டிற்குமுன்னே, அன்னை சினந்துகொள்வாளோ என்ற அச்சத்தால், இருவரும் வீட்டிற்குத் திரும்பிவிடுவார்கள்.

கட்டிளங்காளைப்பருவத்தினன் ஒருவன் ஒரு நாள் அச்சோலைப்பக்கம் வருகிறுன். அச்சோலையில் மயிலென ஆடி மகிழும் தலைவியின் அழகுத் தோற்றத்தைக் காணுகிறுன். அவள் மீது காதல் கொள்கிறுன். நாள்தோறும் அப்பக்கம் வருகிறுன். காதலைக் குறிப்பால் அவளிடம் தெரிவிக்கிறுன். பிறகு வெளிப்படையாகவே தன் விருப்பத்தை வாய்விட்டுத் தோழியின்மூலம் தெரிவிக்கிறுன். தலைவியும் அவன் அழகையும் பழகும் பண்பையுங் கண்டு மயங்குகிறுள்; அவனைக் காதலிக்க இசைகிறுள். இருவரும் களவொழுக்கத்தில் ஈடுபடுகின்றனர். இன்ப மாலைப்பொழுதுகள் பல கழிந்துகொண்டிருக்கின்றன!

தலைவியின் நடையுடை நடிப்புகளில் ஒரு விதமான மாற்றம் ஏற்பட்டிருப்பதைத் தலைவியின் தாய் உணருகிறுள். யாரேனும் காதலனுடன் களவொழுக்கத்தில் மகள் ஈடுபட்டிருப்பாளோ என்று ஐயுறுகிறுள். களவொழுக்கம் முற்றி, அது ஊரார்க்குத் தெரிந்து, அலர்தூற்றல் ஏற்பட்டுவிடுமாயின் தன் குடும்பத்திற்குப் பழிவந்து சேரும் என்று எண்ணிய தாய், எதற்கும் மகளை வெளியே செல்லவொட்டாமற் தடுத்து, வீட்டிலேயே இருக்கும்படி செய்வது நல்லது என்ற முடிவுக்கு வருகிறுள். அதன்படிக்கு, எங்கும் போகக்கூடாது என்று மகளுக்குத் தாய் கட்டளைப் பிறப்பித்துவிடுகிறுள்.

யாருடனுவது களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கிறுயா என்று கேட்டால், மகள் உண்மையான விடையைக் கூறமாட்டாள் என்று கருதித்தான், தாய் ஏதொன்றும் மகளிடத்தில் கேட்காமல், அவளை வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம் என்று கூறி இல்லிலேயே இருத்திவைத்து விடுகிறுள்.

தலைவன் சோலையிடத்துவந்து நீண்டநேரம் காத்திருந்துவிட்டு, தலைவியைக் காணுததால் எப்படியும் காணவேண்டும் என்ற ஆவலோடு தலைவியின் வீடுநோக்கி வந்து, தலைவியின் வருகையை எதிர்பார்த்து ஓரிடத்தில் மறைவாக ஒளிந்து நிற்கிறுன்.

தலைவன் ஒளிந்து நிற்பதைத் தோழி கண்டுகொள்கிறுள். அவனைக் கண்டும் காணுதவள் போல் இருந்துகொண்டு தலைவனின் காதில் விழவேண்டும் என்பதற்காகத் தலைவியுடன் உரையாடல் நிகழ்த்திக் கொண்டிருக்கிறுள் தோழி.

தோழி : ஏடி! என் அம்மா அவர்கள் அவ்வளவு சினமுடையவராக இருக்கிறுர்கள்?

தலைவி : காரணம் இன்னதென்று எனக்கு ஒன்றும் தெரியவில்லையே!

தோழி : நீ தலைவனோடு கூடியிருந்து மகிழும் களவொழுக்கத்தைப்பற்றி அம்மாவிடம் ஏதேனும் கூறினாயோ?

தலைவி : நான் ஒன்றும் கூறவில்லையே!

தோழி : அவர்களாக எப்படியாவது கண்டு பிடித்திருப்பார்களா?

தலைவி : அவர்களாகக் கண்டுபிடிக்க ஒரு பற்றுக்கோடும் இல்லையே!

தோழி : அவர்களே ஒருகால் மறைந்து நின்று உனது களவொழுக்கத்தைப் பார்த்திருக்கலாம்; அல்லது வேறு யாரேனும் பார்த்துவிட்டு வந்து அவர்களிடம் கூறியிருக்கலாம்!

தலைவி : நேற்று நீயும் நானுந்தானே கடற்கரைச் சோலைப்பக்கம் சென்றோம்! நாம் இருவரும் அங்கு விளையாடினதைத் தவிர, நான் வேறு என்ன செயலைச் செய்தேன்? நான் நேற்று ஏதேனும் செய்திருந்தாலல்லவா, அந்தச் செய்தி பரவ வழி ஏற்பட்டிருக்கும்? அப்படி ஒரு செய்தியைத் தான் யாரும் அறிந்து வைக்கவில்லையே!

தோழி : (சிரித்துக்கொண்டு) நேற்று தலைவன் வரவில்லை, நீ களவொழுக்கம் மேற்கொள்ளவில்லை என்றால், என்றுமே அது நடக்கவில்லை என்று அதற்குப்பொருள்?

தலைவி : நேற்றைக்கு முன்பே அது அவர்களுக்குத் தெரிந்திருக்க முடியாதே! தெரிந்திருந்தால் தான் அப்பொழுதே நான் வெளியேற வொட்டாமல் தடுத்திருபபார்களே!

தோழி : அந்தச் செயல் அல்லாமல் வேறு எந்தச் செயலுக்காக அம்மா அவர்கள் உன்னிடம் சினந்து கொள்ளப் போகிறார்கள்.

தலைவி : அது தானே எனக்குப் புரியவில்லை! எப்பொழுதும் நெய்தல் மலரைப் பறித்துச் சூடிக்கொள் என்று சொல்லிக் கடற்கரைக்கு அனுப்பிவைக்கும் அன்னை, இன்று ஏன் அப்படிச் செய்யாமல், வேறு வகையாகச் செய்து விட்டார்கள் என்பது எனக்கு மிக்க வியப்பைத் தருகிறது! அன்னைதான் என்ன கருதியிருக்கக் கூடும் என்று நீ எண்ணுகிறாய்?

தோழி : உன் களவொழுக்கத்தை அவர்கள் புரிந்து கொண்டார்கள்; எனவே உன்னை வெளியே செல்லவிடக் கூடாது என்று கருதிக்கொண்டார்கள்! அவ்வளவு தான்! இதில் வேறு என்ன இருக்கிறது, வேறு விதமாகக் கருதிக்கொள்ள?

தலைவி : அன்னைக்கு எப்படியடித் தெரிந்திருக்கும்? யார் சொல்லியிருப்பார்கள்?

தோழி : யார் சொல்ல வேண்டும்? உன் உடல் வேறுபாட்டிலிருந்தே உணர்ந்து கொண்டிருப்பார்களே! அவர்களும் உன்னைப் போல் ஒரு காலத்தில் பருவமங்கையாக இருந்தவர்கள் என்பதை மறந்து விட்டாயா?

தலைவி : என் உடலில் என்ன வேறுபாடு தெரிகிறது?

தோழி : உனக்கொன்றும் தெரியாது! ஏனென்றால் நீ காதல் மயக்கத்தில் இருப்பவள்! நீ காதலனோடு களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கிறாய் என்பதற்கு உன் உடலில் என்ன என்ன அறிகுறிகள் காணப்பட வேண்டுமோ அவ்வளவும் காணப்படுகின்றன!

தலைவி : இனி நான் தலைவனை எப்படியடிக் காண்பது?

தோழி : இனி நீ போய் அவனைக் காண வழி ஒருபொழுதும் ஏற்படாது! அவராக வந்து உன்னை முறைப்படி மணந்து கொண்டு தான் சொல்லவேண்டும்.

தலைவி : அவனுக்கு யாருடி இதனை உணர்த்துவார்கள்?

தோழி : அவனுக்கு ஒருவரும் உணர்த்த வேண்டியதில்லை. அவனே உணர்ந்து கொள்வான். உன் மீது அவன் கொண்டிருக்கும் காதல் உண்மையான காதல் என்றால், களவொழுக்கம் நீடிக்காத இடத்து உன்னை முறைப்படித் திருமணம் செய்துகொண்டு, உன்னோடு கூடி வாழ்வதுதான் அவ் ஆண்மகனுக்கு அழகு! அவன் அப்படிப்பட்ட ஆண்மகன் அல்ல என்று யாரும் கூறிவிட முடியாதே! அவன் அவ்வளவு நல்லவனாயிற்றே!

தோழியும் தலைவியும் இவ்வாறாக உரையாடிக்கொண்டிருந்ததை மறைந்து நின்று கேட்டுக்கொண்டிருந்த தலைவன், தலைவியைக் களவொழுக்கத்தில் இனிக் காணமுடியாது என்ற முடிவுக்கு வந்து, திருமணம் செய்து

கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்ற உறுதியான முடிவுடன், அவ்விடத்தைவிட்டு அகல்கிறான்.

❖ ❖ ❖

இது நற்றிணை 27-ஆம் செய்யுளின் கருத்தைத் தழுவி எழுந்த காதற்காட்சியாகும். இதனை இயற்றியவர் குடவாயிற் கீரத்தனார் என்ற புலவராவார். இவர் சோழநாட்டில் தஞ்சை மாவட்டத்தில், நன்னிலம் வட்டத்தைச் சேர்ந்த குடவாயில் (குடவாசல்) என்னும் ஊரைச் சேர்ந்தவர். சோழ அரசரது கருவூலச் சாலை (பணச்சாலை) இவ்வூரில் இருந்தது என இப்புலவர் கூறியுள்ளார். நன்னனது ஏழில் மலை, உறையூர், காவிரி ஆகியவை இவரால் பாராட்டப் பெற்றவையாகும். இவருடைய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில் பதினேழு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

நீனும் யானும் நெருநல் பூவின்
நுண்தா(து) உறைக்கும் வண்டினம் ஓப்பி
ஒழிதிரை வரித்த வெண்மணல் அடைகரைக்
கழிசூழ் கானல் ஆடிய(து) அன்றிக்
கரந்துநாம் செய்ததொன் றில்லை உண்டெனில்
பரந்துபிறர் அறிந்தன்றும் இலரே நன்றும்
எவன்குறித் தனள்கொல் அன்னை கயந்தோறு
இற(வு)ஆர் இனக்குரு(கு) ஒலிப்பச் சுறவம்
கழிசேர் மருங்கில் கணைக்கால் நீடிக்
கண்போல் பூத்தமை கண்டு நுண்பல
சிறுபா(சு) அடைய நெய்தல்
குறுமோ சென்றெனக் கூறாதோளே.

[நற்றிணை—27.]

[பொழிப்புரை: தோழீ! நேற்றைப் பொழுதில் நீயும் நானும் சென்று, மலரின் நுண்ணிய தாதில் பாய்ந்து விழுகின்ற வண்டினங்களைப் போக்கி, ஒழித்த திரைகொழித்த வெண்மையான மணலடுத்த உப்பங்கழிக்கரை சூழ்ந்த சோலையிடத்து விளையாடியதல்லாமல், மறைத்து நாம் செய்த செயல் வேறொன்றுமில்லை; அப்படி யாதேனும் செய்தது ஒன்று உண்டு என்றால், அது எங்ஙனும் பரவிநிற்கும்; நிற்க அதனைப் பிறர் அறிந்துகொண்டார்களுமில்லை; அப்படியாக, அன்னை நம்மை நோக்கிப். பொய்கை தோறும் இறாமீனைத் தின்னும் பறவையினம் ஒலி கிளப்பச், சுறாமீன்கள் மிக்க கழிசேர்ந்த இடத்துத் திரண்ட தண்டு நீண்டு நம்முடைய கண்களைப் போலப் பூத்தமை நோக்கியும், நுண்ணிய பலவாகிய பசிய இலைகளையுடைய சிறிய நெய்தல் மலரைப் பறித்துச் சூடிக்கொள்ளுங்கள் என்று கூறவில்லை; ஆதலின் அவள்தான் பெரிதும் என்ன கருதியிருக்கின்றாளோ? தெரியவில்லை!

ஒப்பி - போக்கி ; கானல் - கடற்கரைச் சோலை ; கரந்து - மறைத்து ; கயம் - குளம் ; இறவு - இறா ; குருகு - பறவை ; சுறவு - சுறா ; கழி - உப்பங்கழி ; கணை-திரண்ட ; குறுதல் - பறித்தல்.]

எந்த வழி?

: இங்கர்சால் :
மொழிபெயர்ப்பு : இரா. நெடுஞ்செழியன்.

மக்கள் செல்லும் வழிகள் இரண்டு உண்டு —ஒன்று இயற்கையானது; மற்றொன்று இயற்கையைக் கடந்தது.

ஒரு வழி—நாம் இருக்கும் இந்த உலகத்திலேயே வாழ—அறிதலினாலும் ஆராய்ச்சியினாலும் அறிவை வளர்ச்சியுறச் செய்ய—புதிய கண்டு பிடிப்புகளால் இயற்கைச் சக்திகளைத் தன் வயப்படுத்தி அவற்றின் பயனை நுகர—கடைசியாக நல்ல உணவு, உடை உறையுள் ஆகியவற்றைப் பெற—கலையினாலும் அறிவியலினாலும் உள்ளப்பசியைப் போக்கக் கொள்ளப்படுவதாகும்.

மற்றொரு வழி — நாம் எதிர்ப்பார்க்கும் வேறோர் உலகத்தில் சென்று வாழ—நாம் அறியாத வேறோர் வாழ்வைப் பெறவேண்டி இவ்வுலக வாழ்வைப் பலிகொடுக்க—வழிபாட்டுரையாலும், வணக்க முறையாலும் மேக மண்டலத்திற்கு அப்பால், கட் புலனுக் கெட்டாத பொருளின் உதவியையும் ஒத்தாசையையும் பெற கொள்ளப்படுவதாகும்.

ஒரு வழி—அறியவும், ஆராயவும், சிந்திக்கவும் பகுத்தறி வொளியைப் பின் பற்றிச் செல்லவுமாகும். மற்றொரு வழி—எதையும் நம்பவும், அப்படியே ஒப்புக்கொள்ளவும், அதையே பின்பற்றவும், தன்னுடைய சொந்தவுணர்ச்சிகளின் ஆட்சியை மறுக்கவும், சொந்தப் பகுத்தறிவின் தீர்ப்பைப் புறக்கணிக்கவும் தாங்கள் எல்லாம் அறிந்துவிட்டதாகச் சொல்லிக் கொள்வோருக்கு வணங்கி நிற்கவும் ஏற்பட்டதாகும்.

ஒரு வழி—உன்னுடைய மனைவிக்கும், குழந்தைகளுக்கும் உன்னைச் சேர்ந்த ஏனை மக்களுக்கும் உதவிசெய்யவும், நீ அன்பு செலுத்தும் மக்களை மகிழ்ச்சிக் கடலிலாழ்த்தவும், அவர்களின் வாழ்விலேற்படும் துன்பங்களைத் துடைக்கவும் ஆகும்.

மற்றொரு வழி—பேய், பூதம், பிசாசு, கடவுள் ஆகியவைகள் வேறோர் உலகத்தில் தனக்கு வாழ்வளிக்கும் என்ற நம்பிக்கையின் பேரில் அவைகளுக்காகவே இவ்வுலகத்தில் தன்னை வாழச்சொல்லுவது

ஒரு வழி—பகுத்தறிவை அரியணை யேற்றி உண்மைகளின் மீது நிற்பது. மற்றொரு வழி —கொடுங்கோன்மைக்கு முடிசூட்டி பக்தியின் மீது நிற்பது.

ஒருவழி—கண்டு—கேட்டு—தொட்டு அறியும் உணர்ச்சிகளால் சரி பார்க்கவும், மூளையை ஒளியுடன் விளக்கச் செய்யும் அறிவொளியின் வழி நடப்பதும் ஆகும்.

மற்றொரு வழி—தன்னுள் இருக்கும் அறிவொளியை அணைத்து விட்டு, குருட்டுத்தனமாக மற்றவர் காட்டும் வழிகளில் செல்லச் செய்வதாகும்.

ஒரு வழி—உண்மையுள்ள மனிதனாக இருந்து, மற்றவர்க்குத் தன்னுடைய கருத்துக்களைக் கொடுத்து, அஞ்சாமலும், நிலைத்து நின்றும், மேலுலக—நரகங்களைப்பற்றிக் கவலைப்படாமலும் வாழ்வதாகும்.

தலைவி களவொழுக்கத்தில் ஈடுபட்டிருப்பதை எக்காரணங் கொண்டாவது தாய் அறிந்துகொண்டு விடுவாளேயானால், பிறகு மகளை வெளியே செல்லவிடமாட்டாள் என்பதும், வீட்டிற்குள்ளேயே காவலில் வைத்து விடுவாள் என்பதும், அதுகண்டு தலைவி வருந்தித் தனக்கு அன்னையால் விதிக்கப்பட்டிருக்கும் காவற் கட்டுப்பாட்டை நீக்க தன்னைத் தலைவன் விரைவில் மணந்து கொள்ளவேண்டும் என்று விரும்புவாள் என்பதும் இச்செய்யுளால் அறியப்படும்.

தலைவன் தலைவியை விரைவில் மணந்து கொள்ளவேண்டும் என்ற செய்தியைத் தலைவியும் தோழியும் சேர்ந்து தலைவனுக்கு உணர்த்தும் பாங்கு மிக அழகாக அமைந்திருக்கிறது.

குளத்தில் இருமீன் கிடப்பதும், கழிகளில் சுருமீன் கிடப்பதும், கழிகளில் நெய்தல் மலர் பூத்து விளங்குவதும், அந்த மலரைப் பறித்துப் பெண்கள் சூடிக்கொள்வதும், பருவ மங்கையர் சோலைகளில் விளையாடி மகிழ்வதும் ஆன உண்மைகள் இச்செய்யுளில் விளக்கப்பட்டிருக்கின்றன.

நெய்தல் மலருக்குக் கண்ணை உவமையாகக் கூறப்பட்டிருப்பது மிக்கப் பொருத்தமானதாகும்.

மற்ருெரு வழி—பிறரை அடிமை கொள்ளவும், அழுத்தி வைக்கவும், சொந்த ஆற்றலுக்குத் துரோகம் புரியவும், ஆண்மையற்ற தன்ஞல் அனுபவிக்க முடியாத உரிமையைப் பிறரிடத்திருந்து பறித்துக்கொள்ளவும் உதவுவதாகும்.

தவருன முறையைப் பின்பற்றித் தவருன வழியில் சென்று கொண்டிருப்போரை, நான் வெறுக்கிறேன் என்று எண்ணி விடாதீர்கள்.

நம்முடைய முன்னேர்கள் அவர்களால் ஆனதைச் செய்தார்கள். இயற்கையைக் கடந்து நிற்கும் பொருளொன்று உண்டு என்று அவர்கள் நம்பினுர்கள். வழிபாட்டுரை கூறுதலும், விரதமெடுத்தலும், அந்தப் பரம் பொருளை ஊக்குவித்து, வெய்யிலும், மழையும், அறுவடையும், உலகில் நீண்ட கால வாழ்வும், மறு உலகில் பேரின்பமும் பயக்கச் செய்யும் என்று கருதினுர்கள். அவர்களுக்குக் கடவுள் குற்றமற்ற முழுமுதற் கொற்றவனுக விளங்கினுர். அவர் உடனுக்குடன் பழி வாங்குபவர் என்றும், திடீரென்று கோபங் கொள்ளுகிறவர் என்றும் கொடுந் தண்டனை விதிப்பவரென்றும் கருதினுர்கள். அவர் பகைவர்களைச் சந்தேகத்துடனும், வெறுப்புணரச்சியோடும் பார்ப்பவர் என்றும், அன்பர்களைத் தாராள மனப்பான்மையுடன் நடத்துபவர் என்றும் அவர்கள் கருதினுர்கள். அந்தக் கடவுளைப் போன்ற வலிமையையும் சற்று அதிகமான தந்திரத் தன்மையையுங் கொண்ட தீமைக் கடவுள் ஒருவரும் இருக்கிருர்என்று அவர்கள் எண்ணினுர்கள். விலங்கின் கூரிய நகங்களுக்கிடையில் சிக்கிய சுண்டெலி போல, இந்த இரண்டு கடவுளர்க்கிடையில் மனிதன் அகப்பட்டிருந்தான்.

இந்த இரண்டு கடவுளர்களும் அச்சத்தைத் தான் உண்டாக்கினுர்கள். நமது முன்னேர்கள், கடவுளிடத்து முழு அன்பையும் காட்டிவிடவில்லை; பூதத்தை முழுவதும் வெறுத்துவிடவுமில்லை. அவர்கள் இரண்டையுங் கண்டு அஞ்சினுர்கள். மறு உலகத்தில் கடவுளோடு சேர்ந்து வாழவும், இவ்வுலகத்தில் பூதத்தோடு சேர்ந்து இருக்கவுமே அவர்கள் உண்மையில் விரும்பியிருந்தார்கள். இயற்கையில் நிகழும் பல நிகழ்ச்சிகளுக்கு அவர்கள், தங்கள் சொந்தப் பண்புகளே காரணமாகும் என்று நம்பினுர்கள். பெரு வெள்ளங்கள், புயற்காற்றுகள், பூகம்பங்கள், கொள்ளை நோய்கள், கொந்தளிப்புகள் எல்லாம் மக்களுக்குக் கொடுக்கப்படும் கொடுந்தண்டனைகளென்றும், நல்லநிகழ்ச்சிகளெல்லாம் கொடுக்கப்படும் பரிசுகள் என்றும் அவர்கள் கருதினுர்கள்.

ஒவ்வொன்றும் கடவுளின் நேரடியான ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு அவரின் மேற்பார்வையின்கீழ் இருந்தன. காற்று—காரிருள்—எல்லாம் தேவதைகளும், பேய்களும் உலாவுமிடங்கள். மந்திரக்காரர்களும், மந்திரக்காரிகளும் பக்தியும் பயமும் நிறைந்தோரிடத்துத் தங்கள் திட்டவட்டமான தந்திரங்களைச் செய்து வந்தனர். கிரகணங்கள் மக்களின் பாபச் செயல்களின் விளைவால் தோன்றின; எதிர்பாராத நிகழ்ச்சிகள் அற்புதங்கள் என்று கொள்ளப்பட்டன. பழம்பெருங் காலத்தில் மத உலகம் ஒரு பைத்தியக்கார விடுதியாக இருந்தது; பைத்தியம்பிடித்த பாதிரிகளும், குருமார்களும் அவ்விடுதிக் காப்பாளராக இருந்தனர். அப்பொழுது அறிவியல் ஏற்படவில்லை. மக்கள் எதையுங் கண்டுபிடிக்கவில்லை—ஏன், சிந்திக்கவே தொடங்கவில்லை. அவர்கள் நடுங்கினுர்கள். அறியாமையும், குருட்டு நம்பிக்கையும் மதவுலகை ஆட்சி புரிந்து வந்தன.

இறுதியாக ஒரு சிலர் எதையும் பார்க்கவும், பார்த்ததைப் பதியவைக்கவும், பதியவைத்ததைப் பிறகு சிந்தனை செய்யவும் தொடங்கினுர்கள்.

கிரகணங்கள் ஒரு குறிப்பிட்ட இடையீடுகளில் தோன்றுகின்றனவென்றும், அப்படித் தோன்றுவதை முன்கூட்டியே கூறிவிடலாகும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டன. இது மக்களுடைய நடவடிக்கைகளுக்கும் கிரகணங்களுக்கும் யாதொரு தொடர்புமில்லை என்பதைத் தெளிவாக்கிற்று. ஒரு சிலர் பூகம்பங்களும், பெரும் புயல்களும் இயற்கையான முறையில் நிகழ்கின்றனவென்றும், மனித முயற்சிக்கும் அவைகளுக்கும் ஒருவித தொடர்புமில்லாமலேயே அவைகள் தோன்றுகின்றனவென்றும் கூறத் தொடங்கினுர்கள்.

சிலர், தீய கடவுளர் இருப்பதையும், நல்ல கடவுளர் உலக நிகழ்ச்சிகளில் தொடர்பு கொள்ளுகின்றனர் என்பதையும் ஐயுறத் தொடங்கினர். எண்ணற்ற உடுக்களின் கூட்டம், உறுதியாகத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கும் கோள்களின் சுழற்சி, அவைகளில் பல, உலகைவிடப் பெரியன என்னும் உண்மை, உலகத்தைப் பற்றிய சில விபரங்கள், மெதுவாகத் தோன்றி வளர்ந்து பரவும் செடி வகைகள், தீவுகளும் கண்டங்களும் தோன்றும்விதம், எண்ணற்ற ஆண்டுகளாகத் தீயும், நீரும், காற்றும் செய்து வரும் செயல்கள் ஆகியவைபற்றிய விபரம் அறிந்தபிறகு; எல்லா உயிர் உயிர்களுக்குமுள்ள தொடர்பு தெரிந்த பிறகு; ஞாயிறு மண்டலத்தில் உலகம் இருக்கும் இடம் தெளிவான பிறகு; ஆய்வுமுறைகளாலும் ஆராய்ச்சி முறைகளாலும் கலவைப் பொருள்களின் சில உட்பொருள்கள் விளங்கிய பிறகு; அச்சுக் கூடக் கண்டுபிடிப்பினுல் எண்ணங்களும்,

தத்துவங்களும், உண்மைகளும் குவிக்கப் பட்டு, எங்கும் பரப்பப்பட்ட பிறகு, அவர்கள் குருட்டு நம்பிக்கையின் விலங்கை உடைத் தெறிந்துவிட்டு, கடவுள் ஆதிக்க உலகினின் றும் விடுதலை பெற்று, ஒளி உலகை எதிர் நோக்கி நின்றனர். கண்டுபிடிப்பாளர்களும், சிந்தனையாளர்களும் மெதுவாகப் பெருகவும், உண்மைச் செய்திகள் சிறிது சிறிதாகச் சேர்த் துக் குவிக்கப்படவும், அறிவியல்கள் தோற்ற மளிக்க ஆரம்பித்தன; பழைய நம்பிக்கைகள் பொருளற்றனவாக மாறின; வாழ்விலேற்படும் சாதாரண நடைமுறை நிகழ்ச்சிகளில் கடவு ளின் ஆதிக்கம் பின்னடைந்து, மறையத் தொடங்கிற்று.

எங்கும் பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டன; பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட்டனர்; நூல்கள் அச்சியற்றப்பட்டன; சிந்தனையாளர்கள் பெரு கினர். நாளாக நாளாக 'கடந்த பொருளி'டத் திருந்த நம்பிக்கைக் குறைந்தது; நாளாக நாளாக மனிதன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளவும், தன்னம்பிக்கைக் கொள்ளவும் வேண்டும் என்ற கருத்து மக்கள் மனதில் பதிந்தது. இருளும், கரட்டுமிராண்டித் தன்மை யும், குருட்டு நம்பிக்கையுங் கொண்ட நிலையி லிருந்து இயற்கையொளி வெளிக்கிளம்பியது. விடுதலை உணர்வு உள்ளத்தில் இடம் பெற் றது; உயிர் அதன் சக்தியைப்பற்றிக் கனவு காணத் தொடங்கிற்று. எங்கு பார்க்கினும் கண்டுபிடிப்பும், ஆராய்ச்சியும் வலிவுள்ள கருத்தும் தோற்றமளித்தன. கோயில்கள் அறிவியல் நண்பர்களைப் பகைவர்களாகக் காண ஆரம்பித்தன. மதத் தத்துவார்த்தக் காரர்கள் கொலை, கொடுமை, சித்ரவதை புரிய விலங்கையும், தீப்பந்தத்தையும் கையில் ஏந்தித் திரிவாராயினர்.

சிந்தனையாளர்கள் மத விரோதிகளென்றும், நாஸ்திகர்களென்றும், சாத்தானுக்கு அன்பர் களென்றும், கிருஸ்துவின் பெருமையை அழிப்பவர்களென்றும் குற்றஞ்சாட்டப்பட்டு ஒதுக்கப்பட்டனர். அறியாமை, வெறுப் புடைமை, குருட்டு மனப்பான்மை அடங்கலும் கிளம்பி, ஒன்று சேர்ந்து கண்டுபிடிப்பையும், எண்ணத்தையும் தகர்த்தெறிய முற்பட்டன. பல நூற்றுண்டுகளாக இந்தப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டே யிருந்தது. கடவுள் நம்பிக்கை யுடையோரால் எவ்வளவு கொடுமை கள் இழைக்க முடியுமோ அவ்வளவும் இழைக் கப்பட்டன; எவ்வளவு குற்றம் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்யப்பட்டன. இவ் வளவு நிலைமையிலும் இயற்கை வழியைப் பின்பற்றுவோர் எண்ணிக்கையில் வளர்ந்த னர்; கோயிலின் அதிகாரம் காலப்போக்கில் குறைந்து மறைந்தது. இப்பொழுது உலகின் அறிவுடைமை இயற்கை வழியேதான் இயங்கி நிற்கிறது. போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டே தானிருக்கிறது—கடவுள் வரவர வலிவிழந்துகொண்டே யிருக்கிறுர்; இயற்கை வழி வரவர வலிவடைந்துகொண்டே யிருக்கி றது. இன்னும் சில ஆண்டுகளில் மூட நம்பிக் கையை எதிர்த்து அறிவியல் கொள்ளும் வெற்றி, முற்றுப்பெற்று, எங்கும் பரவி நிற்கும் என்பது உறுதி.

ஆகவே, சென்ற பல நூற்றுண்டுகளாக வாழ்வைப்பற்றிய இரண்டு தத்துவங்கள் இருந்து வந்திருக்கின்றன. ஒன்று உணர்ச்சி களை அழிக்கவும், தேவைகளைக் குறைக்கவும், உயர்ந்தவொரு சக்தியை நம்பி அதன் தயவில் வாழவும் செய்வது; மற்றென்று பகுத்தறிவுக் கொத்த முறையில், உணர்ச்சிகளின் வயப் பட்டு, இன்பம் நுகரவும், தேவைகளை மிகப் படுத்தவும், தொழில் வளர்ச்சி அறிவுப் பெருக்கம், கண்டுபிடிப்பு ஆகியவற்றின் துணைகொண்டு அவற்றை உண்டாக்கவும், மனிதன் தன முயற்சியிலேயே வாழவும் ஆன தன்மையை வற்புறுத்துவது. டையோசி னீசு, எபிக்டிடசு, சாக்ரடீசு ஆகியோர் ஓரள வுக்கும், புத்தர், கிருத்து ஆகியோரும் முதலில் தத்துவத்தைப் போதித்தனர். எல்லோரும் பணம்படைத்த ஆடம்பர வாழ்வை வெறுத்த னர். எல்லோரும் கலைக்கும், இசைக்கும் பரம விரோதிகள். நல்ல ஆடை அணிகலன்கள், நல்ல உணவு, நல்ல இருப்பிடம் ஆகியவற்றை வெறுத்தவர்கள். அவர்களெல்லோரும் பஞ் சைக்கும் பராரிக்கும்—குடிசைக்கும் குச்சி வீட்டிற்கும்—அறியாமைக்கும் நம்பிக்கைக்கும் தத்துவாசிரியர்களாக இருந்து வந்தனர். அவர்கள் மறு உலகைப்பற்றிய பெருமைகளை யும், இவ்வுலகைப்பற்றிய துன்பங்களையும் போதித்துவந்தனர். அவர்கள் செழிப்புடை யோர், உழைபபுடையோர், இன்பவாழ்வுடை யோர் ஆகியோரைப் பரிகசித்தனர்; இரப்போ ருக்காக மேலுலகத்தைக் காப்பாற்றிவந்தனர்.

தத்துவ ஞானம் தன் பலமிழந்து வருகிறது. பெரும்பாலான மக்கள் இங்கேயே, இவ்வுலக வாழ்விலேயே மகிழ்ச்சியோடு காலங்கழிக்க விரும்புகின்றனர். பெரும்பாலோர் உணவும், உடையும், உறையுளும் புத்தகங்களும், படங் களும், ஆடம்பரமும், ஓய்வும் தங்களின் தேவைக்குரியன என்று கருதுகிறுர்கள். அறிவை வளர்ச்சியுறச் செய்யமுடியும் என்று அவர்கள் எண்ணுகிறுர்கள்; இயற்கைச் சக்திகளை வேலைக்காரர்களாகவும் அடிமை களாகவும் கொள்ள முடியும் என்று கருது கிறுர்கள்.

இற்றைப்பொழுது உலகத்திலுள்ள பேரறி ஞர்களெல்லாம், உலகை வெறுத்த மத போதகர்களின் தத்துவத்தையும், அறிவுரை களையும் ஒதுக்கித் தள்ளி வருகிறுர்கள்.

பட்டினி விரதமிருப்பதிலே அவர்கள் இனி ஒரு பொழுதும் நம்பிக்கைக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் நலம் பயக்கக் கூடியது மகிழ்ச்சி என்றும், இங்கேயே, இப்பொழுதே வாழும் வாழ்க்கையே மகிழ்ச்சிகரமானது என்றும் நம்புகிறார்கள். கடவுள் தண்டனைகள் கொடுப்பார் என்பதிலேயோ, மகிழ்ந்து நல்லன செய்கிறார் என்பதிலேயோ இனிஒருபொழுதும் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படப் போவதில்லை. செய்கைகளின் விளைவாக ஏற்படுவனவற்றையே அவர்கள் நம்புவார்கள். கெட்டச் செய்கைகளின் விளைவு தீமை பயப்பதாகவும் நல்ல செய்கைகளின் விளைவு நன்மை பயப்பதாகவும் அவர்களால் கொள்ளப்படுகின்றன.

மனிதன் பகுத்தறிவைக் கொண்டும் ஆராய்ச்சியைக் கொண்டும் மகிழ்ச்சியோடு வாழ்வதற்குரிய நிலைமைகளைக் கண்டறிந்து, அந்த நிலைமைகளுக் கேற்ப வாழவும், நடக்கவும் முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். கிரகணங்களும், பூகம்பங்களும், கொந்தளிப்புகளும், எரிமலைகளும் மனிதனுடைய செயலின் விளைவு என்று அவர்கள் நம்பவில்லை. இயற்கையைக் கடந்து நிற்கும் பொருள் ஒன்று உண்டு என்று இனி ஒரு பொழுதும் நம்பப் போவதில்லை. காணமுடியாத மேலுலக அரசனுக்குத் தாங்கள் எடுபிடி என்றோ, அடிமைகளென்றோ அல்லது சாதகமானவர்களென்றோ அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. அனேக துன்பங்களை அறிவினால் போக்கிக் கொள்ள முடியும் என்று அவர்கள் உணர்ந்தார்கள்; அந்த காரணத்திற்காகத்தான் அறிவு வளர்ச்சியில் நம்பிக்கை கொண்டார்கள். பள்ளிக்கூடமே அவர்களுக்குச் சிறு கோயில்; பல்கலைக்கழகமே அவர்களுக்கு மாபெருங் கோயில்.

சில நூற்றாண்டுகள் வரையிலும் இருவித அரசாங்கங்கள் இருந்து வந்திருக்கின்றன; ஒன்று மதவழியைப் பின்பற்றியது, மற்றொன்று மதமற்ற வழியைப் பின் பற்றியது.

அரசன் கடவுளிடத்திலிருந்து நேரே அதிகாரத்தைப் பெற்றதாகக் கருதினான். அவனுடைய ஆணைக்கு மக்கள் கீழ்ப்படிய வேண்டியது கடமையாயிற்று. குருமார்கள் கடவுளிடத்திலிருந்து வரப்பிரசாதம் பெற்றனர்; மக்கள் அதை நம்பக் கடமைப்பட்டிருந்தார்கள்.

மத வழி அரசாங்கங்கள் மறைந்து வருகின்றன; மதமற்ற வழி அரசுகள் அந்த இடங்களைக் கைப்பற்றி வருகின்றன. மனிதன் வளர்ந்து கொண்டே வருகிறான்; கடவுள்கள் தேய்ந்து மறைந்து கொண்டே போகின்றன. இந்தப் "பரிசுத்த" அரசாங்கங்களெல்லாம், பெரும்பான்மையோரின் பயம், அறியாமையின் மீதும், சிறுபான்மையோரின் தந்திரம் கொடுமை, பொய் ஆகியவற்றின் மீதும் நிற்பதாகும். மதமற்ற வழியைப் பின்பற்றும் அரசாங்கம் அறிவுடைமை நாணயமுடைமை உறுதியுடைமை ஆகியவற்றால் எழுப்பப் பட்டதாகும்: சிலரின் ஆட்சிக்கு உட்பட்டதல்ல, பலருக்குச் சொந்தமானது.

பாதிரி அல்லது குருமார், பூதம் அல்லது கடவுள் ஆகியவற்றின் உதவி சிறிதளவுமின்றி மனிதன் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளமுடியும் என்பதை நாம் அறிகிறோம். மதம் எந்தக் காரணகாரிய ஆராய்ச்சிக்கும் நிற்கக் கூடியதல்ல என்பதை நாம் அறிவோம். காரணமில்லாமல் நம்பும் செய்கை போற்றக் கூடிய செயலாகாது என்பதை நாம் உணர்ந்து வருகிறோம். நாம் உள்ளத்தில் பதிய வைத்திருக்கும் அறிவினைக் கொண்டு காரணகாரியங்களை அறிந்து அவ்வழி நடக்க முடியும். வேறு யாரும் தன்னம்பிக்கையை மறுக்க முடியாது. கடவுளை நம்புவதால் தனிப்பட்ட நல்ல பண்பு ஏற்படுகிறதென்பதை நம்புவதற்குக் காரண காரியங்களிலிருந்த போதிலும், நாம் ஏற்றுக்கொள்வதில்லை; காரணமில்லாமலேற்படுகிற நம்பிக்கையிலும் நல்ல பண்பு இருப்பதாக நாம் ஒப்புக்கொள்வதில்லை.

கடவுளை நம்புபவர்கள் அனைவரும் நல்லவர்களாகவே இருப்பதில்லை. மிகவும் கீழ்த்தரமான கொரேமான மக்களும் கடவுள் நபிக்கையாளராக இருந்து வருகின்றனர். சாக்ரடிசுக்கு நஞ்சூட்டிக்கொன்ற 'கனவான்கள்' கடவுள் நம்பிக்கையாளர்கள்தாம். ஏசுவைச் சிலுவையிலே சிதைத்த யூதர்கள் கடவுள் நம்பிக்கையாளராகவும், வழிபாட்டுக்காரர்களாகவுந்தாமிருந்தனர். இறுதியாக, நாம் நம்முடைய முன்னோர்களின் மதத்தை ஆராய நமக்கு உரிமை யிருக்கிறதென்பதில் நாம் உறுதி கொள்கிறோம்.

இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று கடவுளுக்காக வாழ்வது, மற்றொன்று நமக்காக வாழ்வது. ஒன்று குறுகியவழி, மற்றொன்று விரிந்தவழி. நாம் விரிந்தவழி வழியே செல்வோம்; நம்முடன் அறிவியலும், கலையும், இசையும், நாடகமும், மகிழ்ச்சியும், கிளர்ச்சியும், அழகும், அமைதியும் நிறைந்த உலகம் உருண்டு வரட்டும்!

கணவனும், மனைவியும், குழந்தைகளும் நண்பர்களும் ஒன்று சேர்ந்து வாழ்நாளின் விடியலிலிருந்து அந்திவரையிலும் அன்பும் மகிழ்வும் ஏற்படத்தக்க முறையில் விரிந்த வழியே நாம் எல்லோரும் நடந்துகொள்வோம்!

விரிந்த இயற்கை வழியே நாம் நடப்போம்! மனிதனுக்காகவே உயிர் வாழ்வோம்!

நல்ல தீர்ப்பு

["செல்வன்"]

குமுதா :

பெற்றவளைப் பிரிவது என்றால் யாருக்கும் வருத்தம் இருக்கத்தானே செய்யும்! அதுவும் என் போன்ற பெண்களின் வருத்தத்திற்குக் கேட்கவா வேண்டும்? பார்க்கப் போனால், ஆண்களைக் காட்டிலும் என் போன்ற பெண்கள் தான் பெற்றவளுடன் அதிக நேரம் பழகுகிறோம். உண்ணுவதற்கும், உறங்குவதற்கும் வீடு தேடுவதைத்தவிர, மற்ற நேரங்களில் ஆண்கள் வெளி உலகத்துடன் பெரும்பாலும் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். என் தந்தை உயிரோடு இருந்திருந்தால் இன்றைக்கு என் நிலை இப்படி ஆகியிருக்குமா? "பெண்கள் வெறும் அடுப்பங்கரை காரியத்துடன் மட்டும் நின்றுவிடக் கூடாது, உலக விவகாரங்களைக் கற்றறிந்து ஆண்களுக்கு உதவி செய்யவேண்டும்—அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற நிலைமாறி பாரதியார் கனவு கண்ட புதுமைப் பெண்கள் நாட்டில் தோன்றினால்தான் சமூகத்திலுள்ள சாபக்கேடுகள் ஒழிந்து சமூகத்தில் முன்னேற்றம் ஏற்பட வழி பிறக்கும்" என்று அவர் அடிக்கடி கூறுவது நேற்றுத்தான் கூறியதுபோல் கேட்கிறது. அவர் இறந்து ஏழாண்டுகள் உருண்டு ஓடி விட்டன.

என் நான்கு ஆண்டுக் கல்லூரி வாழ்வும் முதல் ஆண்டைப்போலவே எவ்வித நிகழ்ச்சியுமின்றிக் கழிந்திருந்தால் இப்படி அண்ணனும், அம்மாவும் என்னிடம் கோபித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். என் தங்கையும், தம்பியும் சேதி இன்னதென்று தெரியாது, என் நிலை கண்டு என்மீது பரிதாபப்படவும் நேர்ந்திருக்காது. அப்படித்தான் நான் செய்த 'பாவம்' என்ன? என் உடன் படித்த தோழன் கருணாகரனைக் காதலித்தேன். இது குற்றமா? காதலிப்பது குற்றம் என்றால் என்னைப் பெண்ணாகப் பெற்றது அவள் குற்றமல்லவா? சுதந்திரப்போக்குடன் உலகை அறிய வேண்டும் என்று வளர்த்த என் தகப்பனார் குற்றமல்லவா? என் தாயும் தமையனும் வெறுத்து ஒதுக்கக்கூடிய அளவிற்கு அவர் என்ன கூன், குருடா அல்லது நொண்டி, முடமா? கல்வி இல்லாதவரா? பிணியாளரா? கண்ணைப்பறிக்கும் இரத்தச் சிவப்பு இல்லை அவர். ஆனால் கண்ணிற்கு குளிமை அளிப்பதுபோல் மா நிறம். நல்ல உயரம் எடுப்பான தோற்றம். பண்பாடு உடையவர். தாழ்ந்த சாதி என்று கூடச் சொல்வதற்கில்லை. என்னைப்போல நாயுடு வகுப்பைச் சேர்ந்தவரல்ல. சைவப் பிள்ளை அவர். அவர் அப்பாவோ பெரிய பக்தர். காசு பணம் இல்லாதவர்களும் அல்ல. ஏராளமான பணமும், நல்ல செல்வாக்கும் உடையவர்கள் தான். அவர் தந்தையின் உதவிபெறாத கோயில்களோ, தர்ம சத்திரங்களோ இல்லையெனலாம். பெருந்தன்மையும், பிறருக்கு உதவும் பண்பும் நிரம்பிக் கிடந்தன அவரிடத்தில்.

கல்லூரியில் முதல் ஆண்டு எனக்கும் அவருக்கும் அறிமுகம் கூடக் கிடையாது. இரண்டாம் ஆண்டு இறுதியில் என நினைக்கின்றேன். பல கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொள்ளும் கட்டுரைப்போட்டி ஒன்று நடைபெறவிருந்தது. அதில் நல்ல கட்டுரைகள் எனத் தேர்ந்தெடுக்கப் படுபவைகள், கட்டுரை எழுதியவர்களால் அதற்கு எனக் கூட்டப் படும் சிறப்புக் கூட்டத்தில் வாசிக்கப்பட வேண்டும். "அரசியலில் பெண்களின் பங்கு" என்பது கட்டுரைக்கு உரிய பொருள். கட்டுரை எழுதிப் பழக்கப்பட்டால் வரவிருக்கும் தேர்வுக்கு உதவியாக இருக்கும் என் நினைத்தேன். அத்துடன் என் அண்ணனும் நான் போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெற வேண்டும் என்று வற்புறுத்தினான். நல்ல கட்டுரைகளில் ஒன்றாக என்னுடைய கட்டுரைரிம் தேர்ந்தெடுக்கப்பட்டதை நினைக்க, நினைக்க இன்றுகூட எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. ஆனால் இந்தக் கட்டுரைத் தேர்வு என் வாழ்க்கையிலேயே பெரும் தேர்வாக இருக்கும் என்று எனக்கு அப்போது தெரியாது.

என் கல்லூரிப் பேராசிரியர் சிறப்புக் கூட்டம் கூடவிருந்த நாளைக்கூறி என் கட்டுரையை, நான் படிக்கவேண்டும் என்றும் கூறினார்.

அந்த நாளும் வந்தது. எனக்கோ முன் பின் மேடை ஏறிப் பழக்கமில்லை. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. தொண்டை கம்மியது. கால்கள் கிடுகிடு வென்று ஆடிக் கொண்டிருந்தன. பயத்தினால் வெளிரிப் போயிருந்த என் முகத்தைப் பார்த்தார் பேராசிரியர். "ஏன், உடம்புக்கு என்ன? முடியவில்லை என்றால், நீ சிரமப்பட வேண்டாம், வேறு யாரிடமாவது கொடுத்து வாசிக்கச் சொல்" என்று கூறிவிட்டுச் சென்றார், என் தோழிகளிடம் கெஞ்சினேன். எல்லோரும் "உன்னைப்போலத்தானே, எங்களுக்கும் இருக்கும்," என்று கூறி மறுத்துவிட்டனர். கருணாகரன் தற்செயலாக அந்தப்பக்கம் வந்தார். கட்டுரை வாசிக்க வேண்டிய நான் கலங்கிய நிலையில் இருக்கக்கண்டார். "உடல் நலமில்லாவிட்டால் கூட்டத்திற்கு வருவானேன்? ஓய்வு எடுத்துக்கொண்டு வேறுயாரையாவது படிக்கச் சொல்லுங்கள்" எனக் கூறினார். தோழிகள் மறுக்கிறார்கள் என்றதும் "பரவாயில்லை, நான் வேண்டுமானால்........." என்றார். அவர் அதைக் கூறி முடிப்பதற்குள் என் கையிலிருந்த கட்டுரைத் தாள்களை அவர் கைகளில் திணித்துவிட்டு ஒரு பெரிய பெருமூச்சு விட்டேன், பாரம் கழிந்தது என்று. ஆனால் உண்மையிலேயே பாரம் கழியவில்லை. நாளொரு சுமையாகப் பாரம் நெஞ்சில் ஏறிக் கொண்டுதானிருந்தது.

அன்று கருணாகரன் என் கட்டுரையைப் படித்தார். நான் எழுதியதைக் காட்டிலும் அவர் வாசித்தமுறை மிகவும் நன்றாகக் கேட்பவர் மனதில் பதியும்படி இருந்தது. அவர் படிக்கும்பொழுதே பலர் என்னையும், அவரையும் மாறி மாறிப் பார்த்தனர். அவர்கள் முகத்தில் தோன்றிய சந்தேகக் குறியும், பேச்சில் ஒளித்த கிண்டல்களும் என்னை என்னவோ செய்தன. பாவம்! என் கட்டுரையைப் படித்ததினால்தானே அவருக்கும் இந்த கேலியும், கிண்டலும் என்று எண்ணினேன். அன்று அவரிடம் எனக்குத் தோன்றிய பச்சாத்தாபம் மிகுந்து பரிவு ஏற்பட்டு அது காதலாக மலர்வதற்கும், அதற்குப்பின் எனக்கும் அவருக்கும் ஏற்பட்ட எத்தனையோ சந்திப்புகளுக்கும் பயன்பட்டது.

இரண்டாம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட [illegible] ஆண்டில். எங்கள் படிப்பு முடிந்ததும் திருமணம் செய்துகொள்வது என முடிவு செய்துகொண்டோம். நான்கு ஆண்டுகள் உருண்டோடி எங்கள் தேர்வும் முடிந்துவிட்டது. நானும், அவரும் வெற்றிபெற்றோம். ஆனால் என்னை என் இனத்தவரில் வேறு ஒருவருக்கு மணம்முடிக்க ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தனர், என் அப்பாவும் மாமாவும். எவ்வளவோ மன்றாடினேன் கருணாகரனைத் தான் மணப்பேன் என்று. அண்ணன் சீறினார், "பட்டம் பெற்றுவிட்டாய் என்ற கர்வமா" என்று. பட்டத்திற்கும், திருமணத்திற்கும் என்ன அண்ணா சம்மந்தம் என்றேன். "எதிர்த்துப் பேசுகிற அளவுக்கு வந்துவிட்டாயா சீ, நாயே, மூடு வாயை" என்று கொதித்தெழுந்தார்.

"அம்மா! என் வாழ்வு செழித்தால் உனக்குப் பெருமையில்லையா? நான் மனம் மகிழ்ந்து வாழ்ந்தால், உன்மனம் நிறைந்துவிடுமே அம்மா! நீயாவது அண்ணனிடம் சொல்லக் கூடாதா?" என்று கூறினேன். அவள் மௌனம் சாதித்தாள். எனக்கு வேதனை தாளமுடியவில்லை. அம்மா ஒப்புக்கொள்வாள், என்ன இருந்தாலும் பெற்று வளர்த்தவள் அவளல்லவா, வளர்த்த பெருமை அவளுக்குத்தானே தெரியும் என்று நினைத்தேன.

பாவம், அம்மா! அவள்தான் என்ன செய்வாள். என்னையும் அவளையும் கேட்டுக் கொண்டா குடும்பக்காரியங்கள் நடக்கின்றன. என் அப்பா இறந்ததிலிருந்து என் மாமா மருதவாணன்தான் எங்கள் குடும்பப் பெரியவர். அவர் ஒரு பழைய கர்நாடகம். சுபாவத்தில் முரடர். எதையும் தடித்தனத்தால் சாதித்துவிட முடியும் என்பதில் அபார நம்பிக்கை உடையவர். என் அம்மாவுக்கோ, அவள் அண்ணனிடம் அபார மதிப்பு. மற்றொருபக்கம் அடம்பிடிக்கும் அண்ணன். இந்நிலையில் அவள் எனக்கு என்னதான் செய்யமுடியும். "வேண்டாம், அம்மா! குமுதா! மனங்கலங்காதே! மாமாவுக்கு உன் நலத்தில் அக்கரையில்லாமலா இருக்கிறது. நம் இனத்தில் நல்ல பையனாகப் பார்த்து உனக்குத் திருமணம் செய்துவைப்பார், கவலைப்படாதே. வேறு இனத்தில் கொள்வினை, கொடுப்பினை, எல்லாம் கூடாது அம்மா. நம்ம குலதெய்வத்துக்கு அடுக்காது. நம்ம குடும்பமே நாசமாகப் போகும்" என்றாள்.

அண்ணனின் அக்கினிவேகமும், மாமாவின் உருட்டலும் மிரட்டலும் என்னைப் பெற்றவள் [illegible] திற்கு ஒப்புதல் [illegible]. [illegible] துடிக்கின்றேன். என் கவலைகளைச் சொல்லி அழுவதற்குக்கூட ஆள் இல்லை. அண்ணனும் அம்மாவும் அதிகம் பேசவில்லை. மாமாவைக்

537

கண்டாளோ எனக்குப் பிடிப்பதில்லை. இந்நிலையில் என் அண்ணனுக்குப் பம்பாயில் வேலை கிடைத்து, உடனே புறப்பட்டுச் சென்று விட்டார். சிந்தித்தேன். சிந்தனை செய்து என் தலையும் மரத்துவிட்டது. எப்படியும் திருமணம் பேசி முடிக்க ஒருமாதமாவது ஆகும். இதற்குள் ஒருவழி தேடியாக வேண்டும். இதுபற்றி நினைவுச்சுழலில் சிக்கிக் கொண்டிருந்த சமயம் தான் 'எந்த கோட்டையைப் பிடிக்க இந்த யோசனை' என்று கேட்டுக் கொண்டே என் தோழி பாமா உள்ளே வந்தாள். என் கல்லூரித் தோழி அவள். இதுவரை அவளிடம் இதைப்பற்றிக் கூறவில்லை. ஆனால் நெஞ்சில் சுமையை எத்தனை நாள் நானே சுமந்துகொள்வது. யாரிடமாவது சொல்லி ஒருபாட்டம் அழுதால் நெஞ்சின் சுமை குறையும்போல் தோன்றியது. அவளிடம் என் நிலையைக் கூறி சதாசிவத்திற்கு கடிதம் ஒன்று எழுதி அவள்மூலம் அனுப்பினேன்.

கருணாகரன் :

நானும் தக்க பெரிய மனிதர்கள்மூலம் எவ்வளவோ எடுத்துச் சொல்லச் செய்தேன் குமுதாவின் அண்ணனுக்கு. அவன் சீறி விழுந்தான் சென்றவர்களிடம், செவிசாய்த்தானில்லை. படிப்புவாசனை அற்றவனல்ல அவன். கல்லூரியில் படித்துப் பட்டம்வேறு பெற்றவன்தான். ஊம்........படித்தவர்கள் எல்லோருமே படித்தவற்றை நடைமுறையில் கைக்கொண்டால் நாடு என்றோ திருந்தியிருக்குமே. அவனைக் குறைகூறுகிறேனே! என் அப்பா ....பட்டம்பெற்றவர்தான். கல்லூரிப்பட்டத்துடன் அரசாங்கத்தின் விருதும் பெற்றவர்; ஊரில் பெரிய மனிதர். நாலைந்து திருமணத்தை—கலப்பு மணத்தைத்தான்—முன்னின்று நடத்தியவர். காசிமடத்திலிருந்து கன்னியாகுமரிக் கோயில்வரை அவர் பெயர் இல்லாத, அவர் 'கட்டளை' இல்லாத திருக்கோயிலோ, மடாலயமோ இல்லை எனலாம். புதுமையைப் போற்றும் போக்கினர். இப்படியெல்லாம் இருந்தும் என் திருமணம் சம்பந்தமாக நான் கூறியதைக் கேட்டதும் அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "எத்தனை நாளாடா இந்த வேலை. பட்டணத்திலே படிக்கிற வேலை தவிர, மற்றவேலை [illegible] போல்த்தெரியுது. போடாபோ! மண்டு, சாதி, கலப்புமணம் அது இதுன்னு தத்துப்பித்துன்னு எங்கிட்ட சொன்னமாதிரி வெளியே யாரிடமும்சொல்லாதே! பைத்தியக்காரன் என்று தூற்றப்போறாங்க. நாளைக்கு நம்ம சிவசைலம் ஜில்லா கலெக்டர், சிவசங்கரன் பிள்ளை வருகிறார். அவருக்கு இரண்டு பொண்ணு இருக்கு. பொண்ணு கிளியாட்டமாகல்லா இருக்கு. ஏதோ சொத்தும் கொஞ்சம் தேறும்" என்று அலட்சியபாவத்துடன் பேசி என் திட்டத்தைத் தள்ளிவிடப் பார்த்தார் முதலில். நான் திருமணம் செய்துகொள்ளத்தான் போகிறேன். ஆனால், குமுதாவைத் தவிர வேறு யாரையும் அல்ல என்று முடிவாகக் கூறியபிறகு பார்க்கவேண்டுமே என் தகப்பனார் பட்டபாட்டை. கோபத்துடன் கொதித்தெழுந்தார்; சீறிப்பாய்ந்தார். அவரின் கோபமும், சீற்றமும் என் சிந்தையைத் திருத்தாததைக் கண்ட அவர், அவருக்கு வேண்டிய ஒரு சில உள்ளூர்ப் பிறமுகர்களைக் கூப்பிட்டு என்னிடம் தூது அனுப்பினார். குடும்ப கௌரவம்; பரம்பரை அந்தஸ்து என்று என்னவெல்லாமோ சொல்லி என் திட்டத்தை, எண்ணத்தைக் கைவிடச் சொன்னார்கள். என் முடிந்த முடிவு அதுதான். அதினின்றும் கொஞ்சம்கூட மாறப்போவதில்லை என்று கூறிவிட்டேன்.

பிறகு அடுத்த ஆயுதமாக, என் சொத்தில் கால்காசுகூடக் கொடுக்க மாட்டேன் என்று கூட மிரட்டிப் பார்த்தார். அதற்கும் நான் அசையவில்லை. கடைசியாக என்னை வீட்டை விட்டு வெளியேறச் சொன்னார். இந்த நேரம் எனக்கு குமுதாவின் மடல் கிடைத்தது. அவளுக்குத் திருமண ஏற்பாடுகள் நடைபெறுவதற்குள் எப்படியும் அவளை நான் திருமணம் செய்து கொள்ளவேண்டும். ஆனால் அவள் வீட்டில் யாருக்கும் எனக்குக் கொடுக்கச் சம்மதமில்லை. எங்கள் வீட்டில்—வீடு ஏது; அப்பா தான் வெளியேறச் சொல்லிவிட்டாரே—அப்பாவுக்கு மனம் இல்லை. அம்மாவிடம் விஷயங்களை விளக்கி, குமுதாவின் நிலையையும் எடுத்துச் சொன்னேன. பெண்ணின் உள்ளத்தைப் பெண்தானே புரிந்துகொள்ள முடியும். உனக்கு ஒரு மகள் இருந்தால், அதுவும் குமுதாவின் நிலையில் இருந்தால்......இதற்கு மேல் என் பேச்சுக்கு வேலையில்லாமல் போய் விட்டது. ஆம்.....அம்மாவின் கண்களினின்று நீர் ஊற்றெனப் பெருகியது. "தம்பி, எனக்கொன்றும் தடையில்லை, பாவம் அந்தப் பெண்! அப்பா மிகவும் பிடிவாதமாக [illegible] நாள் பொறு. 'நான் செய்வது நல்லவர்கள் செய்யமாட்டார்கள்.' பார்க்கலாம் என்றாள்.

நாள் வந்து நல்லது செய்கிறவரை நான் காத்துக் கொண்டிருக்கத் தயார்தான். ஆனால் என் குமுதாவின் திருமணம்...........அவளை வேறு யாருக்காவது மணம் முடித்து விட்டால்......என்னுடன் கல்லூரியில் ஒன்றாகப் படித்து வந்த நண்பன் நாராயணசாமிக்கு எழுதினேன். அவனுக்கு எங்கள் நட்புபற்றி கல்லூரியிலிருந்தே தெரியும். பார்க்கப்போனால், அவன் தான் நான உற்சாகமிழந்து 'உம்' மென்றிருந்த போதெல்லாம், நம்பிக்கையூட்டி, மகிழச் செய்தவன். அவன் யோசனையின் பேரில் என் தூரத்து உறவினர் ஒருவருக்கு—உறவினர் என்பதைக் காட்டிலும் நண்பர் என்பது பொருந்தும். அவ்வளவு நெருங்கிப் பழகுபவர்—என் நிலையை விளக்கியும், என் திருமணம் நிறைவேற தற்பொழுது கொஞ்சம் பணம் தேவை என்றும் எழுதினேன். அவருக்கு எங்கள் இனத்தவர்களில் என்னிடம் அலாதிப் பிரியம். உடனே எனக்குப் பணம் அனுப்பித்து, அத்துடன் எதற்கும் அப்பாவைக் கலக்காமல் செய்யாதே, என்று அறிவுரைக் கடிதம் ஒன்றும் எழுதியிருந்தார்.

அப்பாவோ, வீட்டை விட்டுப்போனால் கூடக் கவலையில்லை என்ற நிலைக்கு வந்த பிறகு, அவர் எப்படி ஒத்துக்கொள்வார் என்று எதிர்பார்க்க முடியும். நண்பர்களுடன் சேர்ந்து ஒரு முடிவுசெய்து அதன்படி பாளையூர் கிளம்பிச் சென்றோம். அங்கிருந்த எங்கள் கல்லூரித் தோழியின் உதவியால் குமுதாவிற்கு சேதி அனுப்பப்பட்டு என் நண்பர்களுடன் சென்னைக்கு வந்து அங்கே பதிவுத் திருமணத்திற்கு வேண்டிய ஏறபாடுகள் எல்லாம் செய்துவிட்டு மறுபடியும் பாளையூர் சென்று நாங்கள் ஏற்கனவே சேதி அனுப்பியபடி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு காத்துக் கொண்டிருந்தோம் குறிப்பிட்ட இடத்தில். தோழியைப் பார்த்துவிட்டு வருவதாக குமுதா தன் வீட்டில் சொல்லிவிட்டு வெளியேறி குறிப்பிட்ட இடத்தில் எங்களைச் சந்திக்க வேண்டும் என்பது ஏற்பாடு. மணி 10 ஆகி விட்டது. குமுதாவைக் காணவில்லை. எங்கள் முகத்தில் அச்சமும் பீதியும் குடிகொண்டு விட்டன. என்ன ஆயிற்றோ? ஒருவேளை எங்கள் திட்டம் வெளிப்பட்டு குமுதாவுக்கு அதனால்........நல்ல வேலை குமுதா வந்து விட்டாள். நண்பனின் காரில் சென்னைக்கு வந்து சேர்ந்தோம். ஏற்பாட்டின்படி 'பதிவுத் திருமணம்' நடைபெற்றது.

அப்பாவின் நெருங்கிய நண்பர் ஒருவர் மூலம் சென்னையிலேயே ஒருவேலை கிடைத்தது. அதைப் பார்த்துக்கொண்டு அதில் வரும் வரும்படியை வைத்துக்கொண்டு நன்றாகத்தான் வாழ்கிறோம். ஓராண்டு முடிந்து விட்டது. இப்பொழுது மணி—நண்பனல்ல என் பையன்—ஆளைப்பார்த்தால் நன்றாக அடையாளம் கண்டு கொள்கிறான், பார்க்கிறவர்கள் எல்லாம் என் அப்பாவை உரித்து வைத்ததுபோலவே இருக்கிறான் என்கிறார்கள் இதற்கிடையில் என் தகப்பனார் நோய் வாய்ப்பட்டு இருந்தார். போய்ப் பார்க்கலாம் என்ற துடிப்பு. என்ன இருந்தாலும் போனவனிடம் முகம் கொடுத்துப் பேசாமல் இருந்துவிட்டால் என்ன செய்வது என்ற 'சுயமரியாதை' எண்ணம் குறுக்கிட்டது. நான் ஒரு முடிவிற்கு வருவதற்குள்ளாகவே, சென்னைக்கு வைத்தியம் செய்து கொள்ளவந்த அவர் நேரே எங்கள் வீட்டிற்கே வந்துவிட்டார். பேரனைக் கண்டதும் அவர் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியும் உணர்ச்சியும் ஒன்றோடொன்று போட்டி போட்டன.

எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான் சார்! அந்தக் கொஞ்ச நாட்கள் சிரமமின்றி, உற்றார் உடன் பிறந்தோர் பழிச் சொற்களைக் காதில் வாங்காமல் கழித்துவிட்டால் போதும். பிறகு பெற்று வளர்த்தவர்கள் தானாகவே வந்து சேருவார்கள். பேரனைக்காண வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு இருக்காதா என்ன? பேசிக்கொண்டே இருந்து விட்டேனே நீண்ட நேரமாக..........ஹூம்..........அப்பாவுக்கு மருந்து கொடுக்கவேண்டும். நாளை காலையில் அம்மா வேறு வருகிறார்கள் ரெயிலடிக்கும் போகவேண்டும். நேரமாகிறது வர்ரன் சார்!



பெஞ்சமின் பிராங்லின்

நூற்பதிப்பாசிரியர், சிறந்த எழுத்தாளர். மக்களன்பர், அரசியல் வல்லுநர், அறிவியல் வல்லுநர், புதியன கண்டவர்—இத்தனைத் தகுதிகளும் ஒருங்கே அமையப்பெற்று பல துறைகளிலும் சிறந்து விளங்கிய பெஞ்சமின் பிராங்கிலின், வரலாறு தரும் பேரறிஞர்களில் ஒருவராவார்.

பெஞ்சமின் பிராங்கிலின் அமெரிக்க நாட்டில் 1706-ம் ஆண்டு சனவரித் திங்கள் 17-ம் நாள் போசுடன் (Boston) நகரில் பிறந்தார். அவரது தந்தை சோசையா (Josiah) இங்கிலாந்திலிருந்து அமெரிக்கா வந்து குடியேறியவராவார். தாயின் பெயர் அபையா (Abiah) என்பதாகும். பிராங்கிலின் சோசையாவின் பத்தாவது மகனும், ஐந்து தலைமுறையாக கடைசி மகனுக்குக் கடைசி மகன் என்ற வழியில் தோன்றியவருமாவார். சோசையா மெழுகுவத்தி சோப்பு முதலிய பொருள்களை விற்கும் வணிகராக இருந்தார். பிராங்கிலின் சிறு வயதிலேயே படிக்கக் கற்றுக்கொண்டார். ஆனால், தொடர்ந்து கல்விப் பயிற்சிபெற சோசையாவின் செல்வநிலை இடந்தரவில்லை. பத்தாவது வயதில் பிராங்கிலின் பள்ளிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுத் தந்தை நடத்தும் தொழிலில் ஈடுபட நேர்ந்தது. ஆனால், பிராங்கிலினுக்கு இத்தொழிலில் விருப்பம் ஏற்படவில்லை. இரண்டாண்டுகள் கழித்து தனது ஒன்றுவிட்ட அண்ணன் சேம்சு என்பவர் நடத்திவந்த அச்சகத்தில் பயிற்சிபெற நுழைந்தார். சேம்சு 1721-ல் நியூ இங்கிலாந்து கரன்ட் என்ற செய்தித்தாளை ஆரம்பித்தார். 1722-ல் சேம்சு கைது செய்யப்பட்டு தண்டனை அடையவே, செய்தித்தாள் பிராங்கிலின் மேற்பார்வையில் நடைபெற்றது. ஆனால், பிராங்கிலின் நீண்டநாட்களுக்கு அங்கு தங்கமுடியவில்லை. 1723-ம் ஆண்டு போசுடனைவிட்டு நீங்கி பிலடெல்பியா நகரையடைந்தார்.

ஒரே டாலர் பணத்துடன் பிலடெல்பியா வந்த பிரங்கிலினுக்கு சாமுவேல் கெய்மர் என்பவரது அச்சகத்தில் வேலை கிடைத்தது. ஆனால், தனது தமக்கையின் கணவரான ராபர்ட் கோம்சு என்பவரது தூண்டுதலின் பேரில் கெய்த் என்பவருக்காக அச்சுப் பொறிகள் வாங்குவதற்கு பிராங்கிலின் இங்கிலாந்து புறப்பட்டுச் சென்றார். இங்கிலாந்து சென்றபின் கூறியபடி பணம் வராது போகவே, பிராங்கிலின் பால்மேர் அச்சுக்கூடத்தில் வேலையில மர்ந்தார். பின் 1726-ல் பிலடெல்பியாவுக்குத் திரும்பி, ஒரு மருந்துக் கடையில் கணக்காளராகச் சேர்ந்து, விற்பனை முறையில் நல்ல பயிற்சிபெற்றார்.

1728 ல் மெரிடிக் என்பவருடன் பிராங்கிலின் கூட்டு சேர்ந்து ஒரு அச்சகம் நிறுவி, 1729-ல் பென்சில்வேனியா செய்தி என்ற பத்திரிகையையும ஆரம்பித்து, 1730 ல் அச்சக முழு உரிமையாளராகவும் ஆனார். அதே ஆண்டில் டெபோரா ரீட் என்னும் மாதை மணம் புரிந்துகொண்டு பிலடெல்பியாவையே தனது வாழ்க்கைக்குகந்த இடமாகக் கொண்டார்.

உலகச் சிறப்புபெற்ற நூல்களில் காணப்படும் அதிநுட்ப சொற்றொடர்களையும், வழக்கிலுள்ள பழமொழிகளையும் திரட்டி எளிய நடையில் நகைச்சுவை ஆங்காங்கே நிரவத் தொகுத்து ஒரு நூல் வடிவாக 1732-ல் ஏழை ரிச்சர்டின் குறிப்பு (Poor Richard's Almanack) என்ற பெயரில் வெளியிட்டார். மேலும் அதில் வாழ்க்கை வசதிக்குவேண்டிய சகல விளக்கங்களும் இடம் பெற்றிருந்தன. இதற்கு எங்கும் நல்ல ஆதரவு கிடைத்தது. புத்தகம் வெளிவந்த சில நாட்களுக்குள் பத்தாயிரம் பிரதிகளுக்குமேல் விற்பனையாகியது. இந்தப் புத்தகத்தின் மூலம்தான் பிராங்கிலின் ஐரோப்பிய மக்களுக்கு அறிமுகமானதும்.

பல பொதுநலப்பணிகள் மூலம் பிராங்கிலின் தான் மக்களன்பன் என்பதை வெளிப்படுத்தினர் 1927 ல் அவர் ஆரம்பித்த சண்டோ (Junto) என்ற சொற்போர் மன்றத்தில் ஒழுக்கம், அரசியல், இயற்கைத் தத்துவம் ஆகியவைபற்றி பேசப்பட்டு வந்தது. பிராகிங்லினது பெருமுயற்சியால் 1731 ல் பிலடெல்பியாவில் ஒரு சுற்று நூல்நிலையம் (Circulating Library) உதயமானது. இதுவே அமெரிக்காவில் முதன் முதல் ஏற்பட்ட நூல்நிலையமாகும். 1743-ல் அமெரிக்கத் தத்துவச் சங்கம் (The American Philosophical Society) என்ற அமைப்பை நிறுவினா. 1751-ல் பிலடெல்

பியாவில் மருத்துவ விடுதி ஒன்று கட்டுவதற்கு வழிவகைகளைக் கண்டார். மாணவர்களுக்கான கல்விக்கழகம் ஒன்றை *1751*-ல் ஆரம்பித்தார். இது பின்னர் பென்னிசில்வேனியா பல்கலைக்கழகமாக மாறியது.

இவைகளைத் தவிர சில பதவிகளும் பிராங்கிலினைத் தேடிவந்தன. அவைகளை ஏற்றுக்கொண்டு தனது வேலையைத் திறம்படச் செய்தார். பென்சில்வேனியா அசெம்ளியின் எழுத்தாளராகவும் (*1736-51*), பிலடெல்பியாவில் உதவி அஞ்சல் அதிகாரியாகவும் (*1751-74*), குடியேற்ற நாடுகளின் கூட்டு அஞ்சல் அதிகாரியாகவும் (*1753-74*), பிராங்கிலின் பொறுப்பேற்று உழைத்துவந்தார். அமெரிக்காவின் அஞ்சல் நிலைய அமைப்பு முறைக்கு பிராங்கிலின்தான் தந்தையாவார். ஒவ்வொரு பகுதிக்கும் சென்று நேரில் நடைமுறையைக் கவனித்ததுடன், விரைவாக அஞ்சல்கள் சேரும்படியான வழிவகைகளை வகுத்தார்.

அச்சக வேலையைக் கவனித்துக் கொண்டும், பொதுப்பணி, அரசியல் காரியங்களில் கலந்துகொண்டும் உழைத்துவந்த பிராங்கிலின் அறிவியல் கல்வியையும் பயின்று வந்தார். அறிவியல்பாற்பட்ட பொருள்களைப்பற்றி சண்டோ மன்றத்தில் பிராங்கிலின் விவாதித்ததோடு, தாமே ஆராய்ச்சிக் கூடத்தில் நின்று உண்மைகளைக் காணமுனைந்தார். அறிவியல் துணைகொண்டு மக்கள் வாழ்க்கை வசதிகளை எந்தெந்த வழிகளில் பெருக்க இயலுமோ அந்த வழிகளைத் தேடினார்.

அறிவியலில் பல பிரிவுகளுண்டு. பிராங்கிலின் பல முனைகளுக்கும் சென்று பொருள் குணை ஆராய்ந்தார். இயக்கவியல் (Physics), இயைபியல் (Chemistry), வானிலை ஆராய்ச்சித் துறை (Meteorology), நிலவுட் கூற்றியல் (Geology), பொறித்துறை (Mechanics), மருத்துவம், கணிதம் முதலிய பல்வேறு துறைகளில் பிராங்கிலினது கவனம் சென்றது.

பிராங்கிலின் ஒரு அச்சாளராகத்தான் வாழ்க்கையைத் துவக்கினார். ஆனால் அவர் காணும் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் ஆராயத் தொடங்கினார். தெருவில் காணப்படும் சாக்கடைச் சகதியிலிருந்து ஞாயிற்றில் காணப்படும் கரும்புள்ளிகள் வரை அவர் காரண காரியங்களை அறிய முற்பட்டார். பிராங்கிலின் வாழ்ந்த காலத்தில் மக்களின் வாழ்க்கை வசதி எப்படியிருந்தது என்று நாம் எண்ணிப் பார்க்க இயலாததாகும். நாம் இப்பொழுது அறிவியல் உலகத்தில் வாழ்கின்றோம். ஒவ்வொரு துறையிலும் நாம் அறிவியல் துணையால் நம்முடைய வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்கிறோம். மேலும் மேலும் வாழ்க்கை வசதிகள் பெருகும் வண்ணம் அறிவியலும் வளர்ந்துகொண்டே போகிறது. ஆனால் பிராங்கிலின் வாழ்ந்த பதினெட்டாம் நூற்றாண்டு அறிவியலின் ஆரம்பகாலமாகும். அப்பொழுதுதான் ஐசக் நியூடனின் ஈர்ப்பு விதியை உலகம் அறிந்திருந்தது. எல்லாத் துறைகளிலும் குறைபாடுகள் மிகுந்து காணப்பட்டன. மேலும் மக்களிடையே மூடநம்பிக்கையும் மலிந்து உலவின. ஆகவே பிராங்கிலின், ஒவ்வொரு பொருளைக் காணும்போதும் அதன் குறைகளைக் கண்டு அவைகளை நீக்கும் வழிவகைகளைக் காண இயலுமா என்று ஆராய்ந்தார். அதன் காரணமாகத்தான் பிராங்கிலின் சகல துறைகளிலும் இறங்கி ஆராய வேண்டியவரானார்.

1742-ல் பிராங்கிலின் எரிபொருளுக்காகும் செலவைக் குறைக்கும் வகையில் ஒரு அடுப்பைக் கண்டுபிடித்தார், அது 'பிராங்கிலின் அடுப்பு' என்றே அழைக்கப்பட்டது. அதைக் கண்டு வியந்து பாராட்டிய பென்சில்வேனியா கவர்னர், அந்த அடுப்புகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் உரிமையை பிராங்கிலினுக்கு மட்டும் வழங்கிப் பாதுகாப்பு தருவதாக வாக்களித்தார். அதனால் பிராங்லினுக்கு பெரும் பொருள் சேரவேண்டும் என்று கவர்னர் எண்ணினார். தான் கண்டுபிடித்ததை வைத்துக்கொண்டு செல்வம் திரட்ட எண்ணாத பிராங்கிலின், "நாம் பலருடைய கண்டுபிடிப்புகளினால் மிக்க பயனை அடைந்து வருகிறோம். அதுபோல் நம்முடைய கண்டுபிடிப்புகளினாலும் பிறர் பயன்பெறும் வண்ணம் நாம் தாராளமாக இருக்கவேண்டும். இதில் கட்டுப்பாடு ஏதும் இருத்தல் கூடாது" என்று கூறிக் கவர்னர் முன்வந்து கொடுத்த ஆதரவை மறுத்துவிட்டார்.

பிராங்கிலின் ஆராய்ச்சிகளில் மிக முக்கியமானது மின்னாற்றல் பற்றி அவர் செய்த ஆராய்ச்சிகளாகும். அவரது மின்னாற்றல் ஆராய்ச்சிகள் *1746*-ல் ஆரம்பமாகியது. அப்போது இங்கிலாந்திலிருந்து பீட்டர் காலின்சன் (Peter Collinson) என்பவர் மின்சாரக் குழாய் ஒன்றை அனுப்பியிருந்தார். அதைப் பார்த்த பின் பிராங்கிலின் கவனம் மின்னாற்றல் மீது படிந்தது. தனக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களில் மின்சாரக் கருவிகளை வைத்துக் கொண்டு ஆராயத் தொடங்கினார். நேர் மின் ஓட்டம் (Positive Electric Current) எதிர் மின்

ஓட்டம் (Negative Electric Current) ஆகிய இரு வகை மின் ஓட்டங்களைக் கண்டு அவை இரண்டிற்குமுள்ள தனிச்சிறப்பை முதன் முதலாகக் கண்டுபிடித்தார். கூர்மையான முனையுள்ள பொருள்களின் மூலம் மின்ஒளியை வெளியிடவும், மின் ஒளியை ஈர்க்கவும் முடியும் என்று கண்டார். மின்சாரத்திற்கும் மின்னலுக்கும் உள்ள ஒற்றுமையை முதலில் கண்டவர் பிராங்கிலின் இல்லை என்றாலும் அந்த உண்மையைக் கண்டறிய செயல் முறை வழியொன்றை வகுத்தவர் பிராங்கிலின் ஆவார். அந்த ஆராய்ச்சியின் முடிவாகத் தோன்றியதுதான் இடிதாங்கிக் கம்பிகள். மின்னலில் உள்ள மின்னாற்றலை எப்படி இழுப்பது என்பது பற்றித்தான் அவர் ஆராய்ச்சி செய்தார். கூர்மையான கம்பிகளை உயர்ந்த கட்டடம் அல்லது கோபுரம் மீது பொருத்தி இடிமேகங்களினால் ஏற்படும் மின்னலிலுள்ள மின்னாற்றலை ஈர்க்கலாம் என்று பீட்டர் கலின்சனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அந்தக் கடிதத்தை 1951-ல் காலின்சன் இங்கிலாந்தில் அச்சிட்டு வெளியிட்டார். அதைக்கண்டு தலிபார்டு (Dalibard) என்பவர் 1952-ம் ஆண்டு மேத் திங்கள் 10-ம் நாள் பாரிசு நகரத்தில், பிராங்கிலின் கூறிய முறையைக் கையாண்டு அந்த ஆராய்ச்சியில் முழு வெற்றி பெற்றார். ஆனால் இங்கிலாந்தில் ஆராய்ச்சி செய்தவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. பிராங்கிலின் தனது கொள்கையை தாமே ஆராய்ச்சி செய்து பார்க்க எண்ணினார். ஆனால் அவரிடம் அதற்கேற்ற கருவிகள் இல்லை. ஆகவே எளிதான கருவியைக் கண்டுபிடிப்பதில் கவனத்தைச் செலுத்தினார், அந்த எளிய கருவிதான் காற்றாடியாகும். 1752-ம் ஆண்டு கோடையில் காற்றாடி ஆராய்ச்சி நடத்தி வெற்றிகண்டார். மழையாலும், காற்றாலும் கிழியாதிருக்க பட்டுத் துணியால் காற்றாடி செய்து அதில் ஒரு அடி நீளத்திற்கு மேலான மெல்லிய, முனைக் கூர்மைபெற்ற கம்பியொன்றைப் பொருத்தி, காற்றாடிக்கு வாலும் கட்டி, நல்ல முறுக்கேறிய கயிற்றினால் அதைப் பறக்கவிட்டார். கயிற்றின் மறு முனையில் ஒரு பழய சாவியை மாட்டினார். காற்றாடி நன்றாகப் பறந்து உயரே எழுந்தது. இடிமேகங்கள் காற்றாடிக்கு மேல் வந்தபோது, மின்னலிலுள்ள மின்னாற்றல் காற்றாடியின் கம்பியின் வழியாக இறங்கி—கயிறு மழையில் நனைந்து ஈரமாக இருந்ததால் மின்சாரம் பாயும் திறன் பெற்றது—கயிற்றின் வழியாக கீழே இறங்கியது. அடிக்கடி கைவிரலால் சாவியைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டேயிருந்த பிராங்கிலின் சாவியில் மின் அதிர்ச்சி ஏற்படுவதை உணர்ந்து தனது ஆராய்ச்சி வெற்றியடைவது கண்டு பெருமகிழ்ச்சி கொண்டார். பிராங்கிலின் தனது ஆராய்ச்சியின் முறையை விளக்கமாகக் குறித்துப் பீட்டர் காலின்சனுக்கு 1752-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17-ம் நாள் ஒரு கடிதம் எழுதினார். பிராங்கிலின் ஆராய்ச்சி பற்றி எங்கும் பேசப்பட்டது. அவர் ஆராய்ச்சிகள் குறித்து பத்திரிகைகளில் வெளியிட்ட செய்திகளும், காலின்சன் வெளியிட்ட கடிதங்களும் பிராங்கிலின் அறிவியல் அறிஞர் என்பதை உறுதிப்படுத்திற்று. 1753-ல் ஆர்வேர்டு, ஏல் பல்கலைக்கழகங்களும்; 1756-ல் வில்லியம், மேரி பல்கலைக்கழகங்களும் பிராங்கிலினுக்கும் எம். ஏ. பட்டங்களை அளித்துப் பாராட்டின.

மின்வயப்பட்ட மேகங்களைப்பற்றி ஆராய்ந்த போது பிராங்கிலின் கண்டுபிடித்த இடிதாங்கிக் கம்பிகள்தான் இன்றும் கட்டடங்களையும், கோபுரங்களையும் இடியின் நாசங்களிலிருந்து காப்பாற்றுகிறது. பிராங்கிலின் எழுப்பிய அடித்தளத்தின் மேல்தான் தற்போதைய மின்னாற்றல் தத்துவங்கள் யாவும் எழுப்பப்பட்டிருக்கின்றன.

பிராங்கிலின் ஆராய்ச்சிகள் மின்சாரத்தோடு நின்றுவிடவில்லை. பல துறைகளிலும் கவனம் செலுத்தினார். வடமுனை வளரொளி (Aurora Borealis) என்ற வடதுருவ முனையில் தோன்றும் பல வண்ண ஒளிச் சிதறல்களுக்குக் காரணத்தை அறிவித்தார். அச்சுவேலைகளில் செப்புத் தகட்டை உபயோகிக்கும் விதத்தை முதன்முதலில் கண்டார். ஈய அச்சுக்கள் நச்சுக்கொண்ட உலோகம் என்று கண்டார். அச்சுக்கோர்ப்பவர்கள் விரலுறை, கையுறை அணிந்துக்கொள்ள வேண்டும் என்ற முறையை ஏற்படுத்தினார். நிறங்களுக்கு ஏற்ப வெப்பத்தின் ஊடுருவும் தன்மை வேறுபடுகிறது என்று ஆராய்ச்சிகளின் முடிவாகக் கண்டார். இருண்டநிற உடைகளைவிட வெளுமையாக உள்ள உடைகள் குளிர்ச்சியுடையன என்று அறிவித்தார். தூரத்தில் உள்ள பொருள்களைப் பார்ப்பதற்கும் அருகிலுள்ள பொருள்களைப் பார்ப்பதற்கும், ஏதுவாக இருக்கும் இருவில்லை மூக்குக்கண்ணாடியைக் கண்டுபிடித்தார். அவர் கண்டுபிடித்த ஆர்மோனிக்கா என்ற இசைக்கருவி எல்லோராலும் பாராட்டப்பட்டது.

கடற்பிரயாணங்களின்போது, கடல், வானம் மாறுபடும் நீரோட்டங்கள், கப்பல் செல்லும்

பாதை, ஞாயிறு, திங்கள் இவைகளின் இருப்பிடம்—ஆகியவை குறித்துப் பிராங்கிலின் கவனம் செலுத்தியதோடு, கப்பலோட்டும் முறையில் வளர்ச்சிக்கான கருத்துக்களையும், தாம் கவனித்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் பற்றி மனதில் எழுந்த எண்ணங்களையும் குறித்தார். ஞாயிற்றின் கரும்புள்ளிகள், அதன் ஒளிக்கதிரின் தன்மைகள், வடகிழக்குப் புயற்காற்று, சூருவளிக்காற்று, ஒலி, காந்தம், ஆறுகள், அலைகள், உப்பு, உப்புத் தண்ணீர், நீரில் எண்ணை ஏற்படுத்தும் மாறுதல், நீர்க்கோர்வையும் அதற்கான காரணங்களும், பயிர்த்தொழில் முறை முதலிய பலவற்றைப் பற்றியும் பிராங்கிலின் ஆராய்ச்சிகள் செய்து பல உண்மைகளை வெளியிட்டார்.

பிராங்லின் 1783-ல் பிரான்சுக்குச்சென்றிருந்தபோது பாரிசில் பலூண்கள் பறக்கவிடப்பட்டு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. அதை நேரிலேயே கண்டு வியந்து, மனிதன் என்றைக்காவது விண்ணில் பறக்கும் வசதியைப் பெற்றேதீருவான் என்று, அறிவியல் வளர்ச்சியில் ஏற்பட்ட நம்பிக்கை காரணமாக, முன்கூட்டியே தெரிவித்தார்.

இராக்காலங்களில் நகர்களில் நல்ல ஒளி வசதிகள் இல்லாததால், களவு, கொள்ளை முதலியவைகள் அடிக்கடி நடைபெற்று வந்தது. இதைக்கண்ட பிராங்கிலின் புது முறைத் தெரு விளக்குத் திட்டமொன்றை வகுத்து, தெருக்களில் நின்று எரியக்கூடிய விளக்கு ஒன்றையும் கண்டுபிடித்தார். நகர சபைகளும் அவரது திட்டங்களை ஏற்று நடைமுறைக்கு கொண்டுவந்தனர். பிராங்கிலின் நினைவாக இன்றும் அதுபோன்ற விளக்குகள் பிலடெல்பியா பொதுமன்றத்தைச் சுற்றிலும் வைக்கப்பட்டிருக்கின்றன.

சேறும் சகதியுமாய்க் காட்சியளித்த தெருக்களைக் காணச் சகியாத பிராங்கிலின, நடைபாதையுடன்கூடிய கப்பிபோட்ட தெருக்களை அமைக்கும் திட்டமொன்றைத் தீட்டி, அது குறித்து 1757-ல் சட்டமியற்றும்படியும் செய்தார். தினந்தோறும் தெருக்களைக் கூட்டி குப்பைகளை அகற்றும் திட்டமும் கையாளப்பட்டது. இதற்கென தனி வரியும் விதிக்கப்பட்டது.

அமெரிக்காவில் பெரும்பாலும் மரங்களைக் கொண்டே வீடுகளைக் கட்டிவந்ததால், தீ விபத்துக்கள் அதிகம் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. தீ விபத்துகளை விரைவில் தடுத்து; தீ பரவாவண்ணம் தடுப்பதற்காக, தீயணைக்கும் படை என்ற அமைப்பு ஏற்படுவதற்கு பிராங்கிலின்தான் தூண்டுதலாக இருந்தார்.

பிராங்கிலின் சிறந்த அரசியல் வாதியாகவும் திகழ்ந்தார். அமெரிக்க விடுதலை இயக்கத்தில் பெரும் பங்குகொண்டு தனது பிற்கால வாழ்வை நாட்டு முன்னேற்றத்திற்கே செலவிட்டார். 1757-ல், பென்சில்வேனியா அசெம்பிளிக்கும் பண்ணைக்காரர்களுக்கும் ஏற்பட்ட சச்சரவைத் தீர்க்க இங்கிலாந்து பாராளும் மன்றத்தில் விவாத மேற்பட்டபோது, அசெம்பிளியின் பிரதிநிதியாகப் பிராங்கிலின் சென்றிருந்தார். 1762-ல் அமெரிக்கா திரும்பினார்; ஆனால் மறுபடியும் 1764-ல் இங்கிலாந்து சென்றார். இங்கிலாந்து பாராளுமன்றம் விதித்த ஸ்டாம்புச் சட்டத்தை எதிர்த்து வாதாடி வென்றார். 1766-ல் அமெரிக்கா திரும்ப எண்ணியவர், பென்சில்வேனியா காலனியின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டதால் இங்கிலாந்திலேயே தங்கநேரிட்டது. 1768-ல் சியார்சியாவும், 1769-ல் நியூசெர்சியும், 1770-ல் மசாச்சுசெட்சும், பிராங்கிலினையே தங்கள் காலனிகளுக்கும் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டன. தேயிலை வரியை எதிர்த்து அமெரிக்கர் எழுப்பிய கிளர்ச்சிக்கு ஆதரவு தரும் வகையில் பத்திரிகைகளில் எழுதினார்.

1775-ல் பிராங்கிலின் அமெரிக்கா திரும்பிய போது நாட்டுப்பற்று மிக்கவராக உரிமைப் போரை ஆதரித்தார். காங்கிரசு சபையின் உறுப்பினராக புதிய ஆட்சி நிறுவுவதற்கு நல்ல திட்டங்களையும் கருத்துக்களையும் வழங்கினார். அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரித்தவர்களில் பிராங்கிலினும் ஒருவராவார். புதிய அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தூதுவராக பிராங்கிலின் 1776-ல் பிரான்சுக்கு அனுப்பப்பட்டார். தனது திறமையினால் அமெரிக்க—பிரான்சு நல்லுறவையும், அமெரிக்காவின் செல்வாக்கையும் வளர்த்தார். 1785-ல் பிராங்கிலின் அமெரிக்கா திரும்பியதும், பென்சில்வேனியாவுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1787-ல் கூடிய அரசியல் சட்ட மாநாட்டிற்கு பிரதிநிதியாகவும் சென்றிருந்தார்.

பெஞ்சமின் பிராங்கிலின் 1790-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் நாள், 84-வது வயதில் இயற்கையெய்தினார். பிராங்கிலின் தனது கடைசிக்காலத்தில் செய்த மக்கள் பணி, அடிமைமுறையை அகற்ற விடுத்த வேண்டுகோளில் கையெழுத்திட்டதாகும்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தங்கத்தின் நிலைமை டாக்டர் சஞ்சீவிக்குப் புதிராக இருந்தது. வீட்டிற்குப்போனதும், நெடுநேரம் அவர் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தார். தங்கத்தின் வீட்டில் முன்பிருந்த குதுகலமும் ஒழுங்கும் இப்பொழுது காணப்படவில்லை — மாலைநேரங்கள் வீட்டிற்குப்போக அவசரப்படும் தங்கம் உற்சாகத்தை இழந்து இருந்தாள். தங்கம் புறப்படுவதற்குச் சிறிது நேரமானாலும் வெளியே காத்திருக்கும் கமலநாதன் இப்பொழுது வருவதில்லை. கணவன்—மனைவியருக்கிடைவரும் சாதாரண ஊடல்—சுலபத்தில் தீர்ந்துவிடக்கூடியதா என்று டாக்டர் சஞ்சீவிக்குப் புரியவில்லை. தனது நெற்றியை புறங்கையால் தடவிக் கொண்டு, அவர் நின்றார். ஆஸ்பத்திரியில், நோயாளியைப் பரிசோதித்துவிட்டு, சரியான காரணங்கள் கண்டுபிடிக்க முடியவில்லையென்றால், அவர் அவ்வாறு நிற்பது வழக்கம். அவருக்குக்கீழ் பணியாற்றும் மற்ற டாக்டர்களுக்கு அது தெரியும். தங்கத்தின் நிலைமையும் நோயாளியைப் போலிருந்தது. மனநோயின் அறிகுறிகள் வெளியில் காணப்பட்டபோதிலும், அதன் காரணங்கள் கண்டுபிடிக்க முடியவில்லை.

"அவள் மிகவும் மனங் குழம்பியிருக்கிறாள். கார் ஓட்டும்பொழுது நன்றாகத் தெரிந்தது. மிகக் கண்காணிப்பாக இருக்கவேண்டும்." டாக்டர், சஞ்சீவி தனக்குள் சொல்லிக்கொண்டார். தங்கத்தின் டாக்டர், சஞ்சீவிக்கு உண்மையிலேயே வருத்தத்தை அளித்தது. தன் மகளைப்போல பாவித்து, தங்கத்தை அவர் பாதுகாத்துவந்தார். இப்பொழுது அவள் சோகமாக இருப்பது, அவர் மனதை வாட்டியது. "கமலநாதனுடன் பேசலாமா? தங்கத்தையேக் கேட்கலாமா? எவ்வாறு பேசுவது, எத்தயைகக் கேள்விகளைக் கேட்பது?" டாக்டர், சஞ்சீவியின் மனதில் முழு உரையாடல்கள் பறிமாறப்பட்டன. சரியான பதில்கள் வருமென்ற நம்பிக்கை அவருக்கு இல்லை. அப்புறம் என்ன செய்யலாம்? "சிறிதுகாலம் பார்க்கலாம். இந்தப் பிணக்குத் தீர்ந்து, எல்லாம் சரியாகப் போய்விடும்" என்று டாக்டர், சஞ்சீவி தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டார்.

தங்கத்திற்கு வாழ்க்கை வரண்டதாகக் காணப்பட்டது. தாகத்துடன்—தாபத்துடன் வரண்ட மனவெளியில் அவள் அலைந்தாள். தனக்கும் தனது கணவனுக்குமிடையில் உண்டாகியுள்ள பிளவு எப்படி ஏற்பட்டதென்று அவளால் எண்ணிப்பார்க்கவே முடியவில்லை. ஏதாவது தவறு செய்துவிட்டோமா? அவர் ஏன் கோபமாக—வருத்தமாக இருக்கிறார் என்று அவள் அடிக்கடி யோசித்துக்கொண்டு, நீண்ட இரவுகள் விழித்துக்கொண்டிருப்பாள். சில சமயங்களில் எழுந்து, ஓடிப்போய், அவருடைய கால்களைக் கட்டிக்கொண்டு அழுதுவிடலாம்போல் தோன்றியது. நாடகத்தில், கதைகளில் அவ்வாறு வந்து, வாழ்வு குதுகலமாவதை அவள் பார்த்திருக்கிறாள். ஆனால், நடைமுறையில் அவ்வாறு நடைபெறுமா? சந்தேகம்தான். வீட்டிலிருந்து இந்த எண்ணங்களைக் கிளறி, மனவேதனையை அதிகப்படுத்துவதைவிட, ஆஸ்பத்திரியில் அதிகநேரம் தங்குவது அவளுக்கு நல்லதாகப்பட்டது. அங்கு மற்றவர்களுக்காக நினைக்கவேண்டியிருக்கிறது. மற்றவர்களுடைய துன்பங்களைக் கவனிக்கவேண்டியிருக்கிறது; மற்றவர்களுடைய கேள்விகளுக்குப் பதில்சொல்ல வேண்டியிருக்கிறது. மற்றவர்களுடைய துன்பங்களில், கவலைகளில் தங்கம் தன்னுடைய துன்பத்தை—கவலையை மறந்தாள். முன்னிருந்ததைவிட அதிக முனைப்புடன், உறுதியுடன் தங்கம் தன்னுடைய வேலைகளில் ஈடுபட்டாள். எட்டுமணிக்கு

முன்னதாகவே அவள் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்துவிடுவாள். வீட்டிற்குப் போகும் பொழுது இரவு எட்டு, ஒன்பது மணிக்கு மேலாகிவிடும். தனது வார்டில் இருந்த வேலைகளை முடித்துவிட்டு, பெரும்பகுதி நேரத்தை நூல் நிலையத்தில்—மருத்துவ நூல் களைப் படிப்பதில் செலவழித்தாள். மாலை நேரங்களில் அனாதைச் சிறுவர் இல்லத்தில் அவள் பொழுது போயது.

தங்கம் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பதை, அவள் உற்சாகத்துடன் இருப்பதாக டாக்டர் சஞ்சீவி முதலில் நினைத்தார். ஆனால் கூர்ந்து கவனிக்கும் பொழுது அவளுடைய உழைப் பின் மீது சோகத்தில் நிழல் படிந்திருப்பது தெரிந்தது. தன்னை மறப்பதற்காக, இடை விடாத உழைப்பில் அவள் ஈடுபட்டிருந்தாள். ஆஸ்பத்திரியில் நீண்ட உழைப்பின் பின், வீட்டிற்குப் போனதும் அவளது மனம் இருளடையும். தனிமையாக இருப்பதை —உலகில், எண்ணத்தில், தனியாக இருப் பதை அவள் உணர்வாள். சாப்பிடும் பொழுது கமலநாதனுக்கும், தங்கத்திற்கும் அதிகப்பேச்சு இருக்காது. ஏதாவது ஆரம் பித்தாலும், ஓரிரண்டு வார்த்தை கேள்வி பதில்களில் முடிந்துவிடும்.

மறுபுறத்தில் கமலநாதனின் வாழ்வும் வேடிக்கையாக மாறியது. அவன் சோகத் தாலோ, வருத்தத்தாலோ மனம் அழுந்திவிட வில்லை. மாறாக ஒருவகை வேதாந்தப் போக்குடன் இருக்கவும், பேசவும் ஆரம்பித் பித்தாள். அவனைப் பார்க்க வருபவர்களில் மிக முக்கியமானவராக, இருந்தவர் நித்தியா னந்தசாமிகள். இரண்டு மூன்று நாட்கள் அவர் வரவில்லையென்றால், கமலநாதன் அவர் இருக்கும் மடத்துக்குப் போய்விடுவான் நித்தியானந்த சாமிகளுடன் பேசிக்கொண் டிருப்பதும், சித்தாந்த வேதாந்த அம்சங்களை விவாதித்துக் கொண்டிருப்பதும், கமலநாத னுக்குத் திருப்தியையளிப்பது. நித்தியா னந்தசாமிகள் போன்ற ஒரு நல்ல ஞானியின் நட்பு இவ்வளவு நாளும் கிடைக்காதிருந்தது, வாழ்வில் பெரியதொரு இழைப்பாக அவனுக் குப் பட்டது. "நமசிவாயம்" "சச்சிதானந்தம்" என்று குரல் எழுப்பிக்கொண்டு நித்தியானந்த சாமிகள் வந்துவிட்டால், மிக ஆவலுடன் கமலநாதன் எழுந்துபோய் வரவேற்பான். சில சமயங்களில், இரவு ஏழுமணிக்கு சொற் பொழிவுகளுக்குப் போய் முடிந்ததும், நித்தியா னந்த சாமிகள் அழைத்துக்கொண்டு கமல நாதன் வருவான். இருவரும் பேச உட்கார்ந் தால், நெடுநேரம் வரை பேசிக் கொண்டிருப் பார்கள். வேதாந்த பாடல்களை, நித்தியானந்த சாமிகள் பாடுவார். அதைக்கேட்டு ரசித்தபடி கமலநாதன் பொழுது போவது தெரியாமல் உட்கார்ந்திருப்பான், மேலே தூக்கம் பிடிக் காமல் விழித்துக்கொண்டிருக்கும், தங்கத் திற்கு அந்தப் பாடல்கள் கர்ணகடூரமாக இருந்தன.

நித்தியானந்த சாமிகளின் பாடல்கள் மட்டு மல்ல, அந்தப் பாடல்கள் தரும் கருத்துக் களும், சிறிது, சிறிதாக கமலநாதனைக் கவர ஆரம்பித்தன. நித்தியானந்த சாமிகள் தந்த பட்டினத்தார், தாயுமானவர் பாடல்களை வைத்துக்கொண்டு தனிமையாக இருக்கும் பொழுது படித்து, மகிழ்வுறுவான். உலகி லுள்ள ஆசாபாசங்களை அறுத்தால்தான், மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளை அழித்தால், நல்ல கதி கிடைக்கும் என்று நித்தியானந்த சாமிகள் சொல்வது, அந்தப் பாடல்களில் பரிபூரணமாக விளக்கப்பட்டிருந் தது. அந்தப் பாடல்களைப் படிக்கப் படிக்க, இந்த வீடு, வழக்கறிஞர் வேலை, சட்டப் புத்த கங்கள், வழக்கு விவசாயங்கள் எல்லாவற்றை யும் உதறித் தள்ளிவிட்டு, வேதாந்தியாராக—சாமியாராகப் போய்விடலாம் என்று தோன் றும். நித்தியானந்த சாமிகளுடன் ஒரு நாள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது இந்தக் கருத்தை லேசாகக் கமலநாதன் சொன்னான். நித்தியானந்த சாமிகளுக்கு உள்ளூர மகிழ்ச்சி. தன்னுடைய உபதேசத்தால், ஒரு ஆன்மா முக்தி மார்க்கத்தில் ஈடுபட்டதென்று பேரு வகை அடைந்தார். ஆனால், அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல், கமலநாதனுக்கு உப தேசம்செய்ய ஆரம்பித்தார். "பெரியோர்கள் சிவனருள் பெற்ற சீலர்கள் செய்த அரும் பெருங்காரியங்களை நினைக்கும் பொழுது; நாமும் அப்படிச் செய்யவேண்டும், இருக்க வேண்டும் என்று தோன்றும். ஆண்டவனின் கடாட்சம் விழுந்திருக்கிறது என்பதற்கு ஒரு அறிகுறி. அடிவாரத்தில் நின்று மலையின் உச்சியைப் பார்க்கும் பொழுது, உச்சிக்குப் போய்விட வேண்டுமென்று ஆசை பிறக்கும். ஆனால் ஒரே தாவுதலில் மலை உச்சிக்குப் போய்விட முடியாது. ஒவ்வொரு படியாக ஏறித்தான் போகவேண்டும். அதுவும் நம் மால் முடியாது. ஈசனருள் வேண்டும். பக்தித் துறையில் உச்சியை ஞானிகளும், நாயன்மார் களும் தான் அடைந்தார்கள். அந்த நிலையை அடைந்ததும் தான், நாயன்மார்கள் அற்புதங் கள் செய்தார்கள். சிவபக்தியின் மேன்மை

யால், பிள்ளைக்கறி தந்திடவும், மனைவியைத் தானமாக ஈயவும், கண்ணையெடுத்துச் சிலைக்கு அப்பவும் ஆன அதிசயங்கள் நிகழ்கின்றன. ஆனால் அந்த நிலைக்குவர நமக்குப் பக்குவம் வேண்டும். துறவியில் பட்டினத்தாருக்கு ஈடாக யாரையும் சொல்ல முடியாது. 'பாரனைத்தும் பொய்யெனவேப் பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆருந்துறக்கை அரிதரிது' என்று தாயுமானவர் பட்டினத்தடிகளைப் பற்றிச் சொன்னார். ஆனால் அப்பேற்பட்ட பட்டினத்தடிகளே, நாயன்மார்கள் நிலைக்குத் தான் போகவில்லை என்று பாடுகிறார்''

நித்தியானந்த சாமிகள் குரலைச் சரிசெய்து கொண்டு, பாடஆரம்பித்தார் :

" வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன்
அல்லன் மாது சொன்ன

சூளால் இளமை துறக்கவல்லேன்
அல்லன் தொண்டு செய்து

நாளாறில் கண்ணிடந்து அப்ப வல்லேன்
அல்லன் நானினிச்சென்று

ஆளாவது எப்படியோ திருக்
காளத்தி அப்பருக்கே ''

நித்தியானந்த சாமிகள் பாடிவிட்டு கமலநாதனைப் பார்த்தபடி இருந்தார். பாடலில் மயங்கி கமலநாதன் உட்கார்ந்திருந்தான். ஆகா! என்ன அருமை! அருமை!

கமலநாதன் பெருமூச்சு விட்டான். " சாமிகளே! அப்படியானால், எங்களைப் போன்றவர்களுக்கு கதிபெறும் மார்க்கமே கிடையாதா!''

"உண்டு! ஆனால் சிறிது சிறிதாகப் பக்குவம் பெறவேண்டும். பக்குவப் பாடல்களைப் படிக்கக் கேட்பது முதல் நிலை. அடுத்தபடி பாடல்களைத் தாமே பாடிக்கொண்டிருக்க வேண்டும். பக்தர்களுக்கு பக்தியைப் பரப்பும் முயற்சிகளுக்கு நம்மாலான உதவியைச் செய்ய வேண்டும். தாமரையிலைத் தண்ணீர் என்று சொன்னார்களே அப்படியிருக்க வேண்டும். ஆண்டவனையடைய ஆயிரம் வழிகளிருக்கின்றன. சிலர் ஆண்டவனை வழிபட்டு முக்தி அடைந்தார்கள். சிலர் ஆண்டவனை வழிபடும் பக்தர்களை வழிபட்டு முக்தியடைந்தார்கள். பெரிய புராணத்தில் அப்பூதியடிகள் என்று ஒரு நாயனாரின் திவ்ய சரித்திரம் இருக்கிறது. அந்த மகான், சிவனடியார்களை வரவேற்று உபசரித்து, அதனால் ஆண்டவனின் அருளைப் பெற்றார். அதைப்போல் இருந்தால் போதும்.''

அன்று நித்தியானந்த சாமிகள் செய்த உபதேசத்திற்கு நல்ல பலன் கிடைத்தது. அன்றிலிருந்து ஒவ்வொரு மாதமும், நித்தியானந்த சாமிகள் நடத்திவரும் மடத்துக்கு ஐம்பது ரூபாய் தருவதாக கமலநாதன் ஒப்புக்கொண்டான்.

மறுநாள் காலை, தங்கம் சாப்பிட உட்கார்ந்த பொழுது, கமலநாதன் தேவாரத்தில் ஒரு பாடலை படித்துமுடித்துவிட்டு, வந்து உட்கார்ந்தான். அவன் நெற்றியில், திருநீற்றுப் பூச்சு இருந்தது. அதைப் பார்த்ததும், தங்கம் தன்னையுமறியாமல் சிரித்துவிட்டாள். கமலநாதன், கோபத்துடன் திரும்பிப்பார்த்தான்.

தங்கம் சிரிப்பை அடக்கிக்கொண்டு, " நெற்றியில் என்ன புதிதாக இருக்கிறது?'' என்று கேட்டாள,

" அதன் பெருமை உனக்கென்ன தெரியும்?'' என்று கமலநாதன் கடிந்துகொண்டான்.

தங்கம் பேசாமல் தனது உணவை முடித்துக்கொண்டு, எழுந்துபோனாள்.

கமலநாதன் அறை, பூஜைமடம்போல் ஆகியது. சிவபெருமான், பட்டினத்தார், அருணகிரிநாதர் படங்கள் மாட்டப்பட்டன. காலையில் எழுந்ததும், பட்டினத்தார், தாயுமானவர்களைப் படித்துமுடித்துவிட்டு, கமலநாதன் சட்டப்புத்தகங்களைப் புரட்டுவான். வெள்ளிக்கிழமைதோறும், நித்தியானந்த சுவாமிகள் வந்து, பூசைகளை நடத்திவைப்பார். பூசையில்லாமல் அந்தப் படங்களை வைத்தால், அவற்றிற்கு மகிமை கிடையாதாம்.

வீட்டில் தங்குவது, தங்கத்திற்கு இன்னும் கடினமான காரியமாயிற்று. காலையில், மாடியை விட்டு இறங்காமல் மேலேயே உட்கார்ந்திருப்பாள். ஏழுமணியானதும், ஆஸ்பத்திரிக்குப் போய்விடுவாள். பின் இரவுவரும்வரை வீட்டைப்பற்றி மறந்திருப்பாள். வெள்ளிக்கிழமையென்றால், தங்கம் சற்றுநேரம் கழித்தே திரும்புவாள். அன்று நித்தியானந்த சுவாமிகளும், அவருடைய சீடர்கள் சிலரும் சேர்ந்து போடும் கூச்சல் அதிகமாயிருக்கும்.

ஒருநாள் தங்கத்தின் வீட்டிற்கு டாக்டர், சஞ்சீவி வந்தபொழுது, அங்கிருந்த மாறுதல்

அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது. கமலநாதன் அப்பொழுது அறையில் உட்கார்ந்திருந்தான். டாக்டர், சஞ்சீவி அறைக்குள் நுழைந்து, சுவற்றில் மாட்டப்பட்ட படங்களையெல்லாம் பார்த்தார். கமலநாதன், டாக்டர் சஞ்சீவியின் முகத்தைப் பார்த்தபடி இருந்தான். ஒவ்வொரு படத்தருகிலும் நின்று, டாக்டர் சஞ்சீவி உற்றுக் கவனித்து, தலையசைத்து மகிழ்ச்சியுடன் திரும்பினார். படங்களைப் பார்த்ததும், அவர் திருப்தியடைந்துள்ளார் என்பது தெரிந்தது.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" கமலநாதன் கேட்டான். சிவனாரின் படத்தைப் பார்த்ததும், புன்முறுவல் பூத்தபடி டாக்டர், சஞ்சீவி நின்றார்.

"நிரம்ப மகிழ்ச்சி!" என்று டாக்டர், சஞ்சீவி தலையசைத்தார்.

தான் செய்துள்ள ஏற்பாடுகளுக்கு டாக்டர், சஞ்சீவியின் ஆதரவு கிடைத்துவிட்டதென்று கமலநாதன் மகிழ்ந்தான். "இந்த வெள்ளிக்கிழமை பூசையுண்டு, நித்தியானந்த சுவாமிகள் வருவார். அவருடைய சொற்பொழிவையும் கேட்கலாம்."

டாக்டர், சஞ்சீவி யோசித்தார். "வரலாம் ஆனால், நேரமிருக்காதென்று நினைக்கிறேன்."

அறையைவிட்டு வெளியேறப்போனவர், திரும்பி நின்று சுவற்றில் இருக்கும் படங்களைப் பார்த்து, "மிக அழகான படங்கள்! உங்களுக்கு இவ்வளவு கலையார்வம் இருக்குமென்று எனக்குத் தெரியாது."

"ஏன அப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று கமலநாதன் தடுமாற்றத்துடன் கேட்டான்.

"ரவிவர்மாவின் அற்புதச் சித்திரங்கள்! ஒவ்வொரு கடவுளும் தத்ரூபமாக தீட்டப்பட்டிருக்கிறது. இதைப்போலவே உள்ள மற்றப் படங்களையும் ஒருங்கே சேர்த்தால், ஒரு மியூசியத்துக்குவேண்டிய கலைக்கூடத்தை அமைத்துவிடலாம்!". டாக்டர், சஞ்சீவி வேகமாக வெளியேறினார்.

"அவன் ஏன் அப்படி ஆகிவிட்டான்?" என்று தங்கத்தை டாக்டர், சஞ்சீவி கேட்டார். கார்போகும் வேகத்தில், வெளியில் பார்த்தபடி தங்கம் உட்கார்ந்திருந்தாள்.

"இதைப்பற்றியெல்லாம் உன்னிடம் கமலநாதன் கேட்பதில்லையா?" டாக்டர், சஞ்சீவி மீண்டும் கேட்டார்.

"எதைப்பற்றி"

"இந்தப் படங்கள், பூசை, வெள்ளிக்கிழமை பிரார்த்தனை எல்லாம்!"

"இல்லை அவைகளைப்பற்றிக் கேட்க எனக்கும் நேரம் கிடைக்கவில்லை." கமலநாதனைக் கேட்கவேண்டுமென்று, அடிக்கடி நினைத்த போதிலும் தங்கம் கேட்டதில்லை.

"ஆமாம் அதுதான் நமக்கும் அவர்களுக்குப் உள்ள வித்தியாசம்! நாம் நேரம் போதவில்லையென்றாலும், சிலர் நேரம் போகவில்லையேயென்று ஏதாவது செய்கிறார்கள். பொழுது போக்கான வேடிக்கை, விழாக்கள் வருகின்றன. கற்பனை உருவங்களுக்கு அரண்மனைகள் கிடைக்கின்றன. கண்முன்னே நடமாடுபவர்களுக்கு ஒட்டைக் குடிசைக் கூடக் கிடைப்பதில்லை."

டாக்டர் சஞ்சீவி பேசாமலிருந்தார். கமலநாதன் தீவிர பக்தனாக மாறியதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. தங்கம் ஆஸ்பத்திரியில் அதிகமான வேலைகளைப் போட்டுக்கொண்டு நேரத்தைப் போக்குவதற்கும், பகவான் படங்களை வைத்துக்கொண்டு கமலநாதன் பூசை பாட்டுகள் நடத்துவதற்கும், பலனில், நோக்கத்தில் பலத்த வேறுபாடு இருந்தன. இருந்தாலும், இருவரும் தங்களை மறந்துவிடும் முயற்சியில் வெவ்வேறு துறையில் புகுந்துவிட்டனரென்று டாக்டர் சஞ்சீவியால் உணர முடிந்தது. கணவன் மனைவியரிடை ஏற்பட்ட பிளவு எதிர்பட்ட முனைகளுக்கு அவர்களைப் பிரித்துச் சென்றது.

(தொடரும்)

★★

வினாவும் விளக்கமும்

வினா : உலகம் ஒன்றாக ஆகிக்கொண்டு வரும்போது, திராவிடத்தைத் தனி நாடாகப் பிரிக்க எண்ணுவது அறிவுடைமை ஆகுமா ?

விளக்கம் : திராவிட நாட்டுப் பிரிவினையை எக்காரணங் கொண்டாவது எதிர்த்துத் தீர வேண்டும் என்று முடிவு செய்து கொண்டவர்கள் அத்துணைப் பேரும் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். இப்படிக் கேட்பது அறிவுடைமை ஆகுமா என்பதுதான சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

உலகம் ஒன்றாக ஆகிக்கொண்டு வருவதாக அவர்கள் எல்லோரும் கூறுகிறார்கள். எங்கே ஒன்றாக ஆகிக்கொண்டு வருகிறது என்பது தான் தெரியவில்லை! தனித்தனித் தன்னாட்சி நடத்திவந்த எந்த இரண்டு நாடுகள், தங்களுடைய எல்லைக்கோடுகளை யெல்லாம் அழித்துவிட்டுத், தாமாகவே எல்லாத் தன்மைகளிலும் ஒன்றாக ஆகிவிட்டன என்று கூறமுடியும்? ஒரு எடுத்துக் காட்டுக்கூட காட்டமுடியாதே! ஒன்றாக இருந்த நாடுகள் இரண்டாகப் பிரிந்தன என்பதற்கு வேண்டுமானால் பல எடுத்துக்காட்டுக்கள் காட்டலாமே ஒழிய, இரண்டாக இருந்த நாடுகள் தாமாகவே ஒன்றாக ஆயின என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டுக்கூட காட்ட முடியாது அண்மைக்கால வரலாற்றில்! போர் தொடுத்து, ஒருநாடு மற்றொரு நாட்டை, அந்த நாட்டின் விருப்பத்திற்குமாறாக விழுங்கி ஒரே நாடாக அதனையும் தன்னோடு சேர்த்துக் கொண்டதற்கு வேண்டுமானால் ஒருசில எடுத்துக் காட்டுக்கள் காட்ட முன் வரலாமே யல்லாமல், தாமே ஒன்றாக விரும்பி இணைந்த நாடுகளைக் காட்ட இயலாது.

அண்மைக்கால உலக வரலாற்றை எடுத்துக் கொண்டால், இந்தியா—பர்மாப் பிரிவினை, இந்தியா — பாகிஸ்தான் பிரிவினை, வட கொரியா—தென்கொரியாப் பிரிவினை, இந்தோ சீனாவில் வடபகுதி—தென்பகுதிப் பிரிவினை, பாலஸ்தீன் — இசுரேல் பிரிவினை, கிரேட் பிரிட்டன்—அயர்லாந்து பிரிவினை, ஆசாத் காசுமீர்—சம்முகாசுமீர் பிரிவினைப் போன்று பல்வேறு நாடுகள் விரும்பிப் பிரிவினைப்பட்ட வரலாறுகளைக் காணமுடியுமே யல்லாமல், விரும்பி ஒன்றுபட்ட வரலாற்றைக் காண முடியாது.

"உலகம் ஒன்றாக ஆகி வருகிறது" என்பது சிலர் மனதில் மட்டுமே நிலவும் கற்பனைக் கூற்றே தவிர, உண்மையில் நின்று நிலவுவது அல்ல.

தனித்தனியாக பிரிந்திருக்கும் உலக நாடுகள், இன்றைக்காலத்தில், தம்மிடையே நெருங்கிய தொடர்பையும்—உறவையும் ஏற்படுத்திக்கொண்டு வருகின்றன என்று கூறினால், அது பொருத்தமான கூற்றாகும். அப்படிப்பட்ட நெருங்கிய தொடர்பையும் — உறவையும் பிரிந்துபோகும் திராவிடமும் தனித்து நின்று வளர்க்க முடியுமே! தனித்து நிற்கும் அமெரிக்கா—பிரிட்டன்—உருசியா—சீனா — சப்பான் — ஈராக் — ஈரான்—பர்மா—மலேயா-ஆத்திரியா - உருமேனியா - இலங்கை - இலக்சம்பர்க்கு போன்ற நாடுகள் எத்தகைய உலக உறவையும்—தொடர்பையும் வளர்க்க அரும்பாடுபட்டு வருகின்றனவோ, அதே அளவுக்குத் திராவிடமும் தனித்து நின்று அடும்பாடுபட இயலுமே! திராவிடம் பிரிவது அத்தகைய உலக உறவையும்—தொடர்பையும் கெடுப்பதாகவோ ஆகாதே!

நாம் கோரும் திராவிடத்தைவிடச் சிறியனவாக விளங்கும் தொண்ணூற்றுக்கு மேற்பட்ட நாடுகள் தனித்தனியாகப் பிரிந்து இருக்கும் போது, திராவிடம் மட்டும் பிரிந்து நிற்கவேண்டும் என்பது எப்படி அறிவுடைமையாகாமற் போகும்? அந்த நாடுகளெல்லாம் தனித்தனியாகப் பிரிந்திருப்பதற்கு எவ்வளவு உரிமையும்—தகுதியும்—வாய்ப்பும்—வசதியும் — அவசியமும் உண்டோ அவையெல்லாம் திராவிடத்துக்கு மட்டும் எந்த வகையில் இல்லாமற் போய்விட்டது?

'உலகம் ஒன்றாக ஆகிவருவதாக', இல்லாதவொன்றை இருப்பதாகக் கூறித், தனித்தனிப் பிரிந்திருக்கும் பல்வேறு நாடுகளை மறந்து,

திராவிடம் தனியாகப் பிரிவது கூடாது என்று கூறுவதுதான் அறிவுடைமையாகாதே ஒழியத், திராவிடம் தனிநாடாக வேண்டும் என்று கோருவது அறியாமையின் பாற்பட்டதல்ல!

❖ ❖ ❖

வினா : இயற்கையில் இருந்துகொண்டே இயற்கையை ஆராய்வது, கனவில் இருந்து கொண்டே கனவை ஆராய்வது போன்றதல்லவா?

விளக்கம் : இயற்கையின் ஒருபகுதியாக நாம் இருப்பதை நம்மால் உணர முடிகிறது. எனவே இயற்கையின் பிறபகுதிகளை ஆராய்கிறோம். ஆராய்ந்து உண்மையைக் கண்டு பிடிக்கிறோம். அந்தக் கண்டுபிடித்த உண்மையே அறிவாகத் திகழுகிறது.

இயற்கையில் இருந்துகொண்டே இயற்கையை ஆராய்வதற்குக் கனவில் இருந்து கொண்டு கனவை ஆராய்வதாகக் கூறி, அதனை உவமையாக்குவது பொருளற்ற வாதமாகும். கனவில் இருந்துகொண்டு கனவை ஆராய்வதாகக் கூறுவது கண்கூடான உவமை அல்ல, அது ஒரு கற்பனை உவமை! கனவில் இருந்துகொண்டு கனவைப்பற்றி ஆராய முற்பட்டதாக யாரையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. அது நிகழ முடியாத தொன்று; நிகழ்வதாக எண்ணிக்கொள்வது தவறு. கனவில் இருப்பதையே நம்மால் உணர முடியாதபோது, அந்தக் கனவைப் பற்றி அந்தக் கனவில் ஆராய முற்படுவதாக எண்ணிக்கொள்வது எப்படிப் பொருத்தமுடையதாகும்? நாம் கனவு காணும்போது, நாம் கனவில் இருப்பதாக நம்மால் உணர முடியாது; கனவு கலைந்தபிறகுதான் கனவில் இருந்ததாக உணரமுடியும்! ஆனால் இயற்கையில் நாம் இருப்பதை நம்மால் உணரமுடிகிறதே; அதேபோது பிற இயற்கைக் கூறுபாடுகளையும் ஆராயமுடிகிறதே! இயற்கை வாழ்வு தீர்ந்தபிறகுதான் நாம் இயற்கையில் வாழ்ந்ததை உணரமுடிகிறது என்று கூறமுடியாது.

இயற்கையில் இருந்துகொண்டே இயற்கையை ஆராயலாம்; ஆனால் கனவில் இருந்து கொண்டு கனவை ஆராயமுடியாது. எனவே, இயற்கை உலகுக்கு கனவுலகை உவமையாக்கி ஒன்றோடு ஒன்றைப் பொருந்திப்பார்ப்பது பொருளற்றதாகும்.

❖ ❖ ❖

வினா : 72 வயதில் திருமணம் செய்துகொண்டார் என்பதற்காகப் பெரியாரின் திருமணத்தைப் பொருந்தாத் திருமணம் என்று சொல்லிய தோழர் அண்ணாத்துரை, 52 வயதான தோழர், கே. ஆர். இராமசாமியின் அண்ணனின் திருமணத்திற்குத் தலைமைதாங்கி நடத்திவைத்தது கொள்கைக்கு மாறுபட்ட செயல் அல்லவா?

விளக்கம் : தோழர் கே. ஆர். இராமசாமி அவர்களின் அண்ணனுக்கு இப்பொழுதே வயது 43தான். அவருக்கு அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்ற போது வயது 39தான். ஆணின் 39 வயதைத் திருமணம் செய்துகொள்ளுவதற்கு உரித்தான ஒரு வயதல்ல என்று உலகோர் பொதுவாக எங்கணும் ஒதுக்கி வைத்துவிடவில்லை. 39 வயதில் ஒரு ஆண் திருமணம் செய்து கொள்ளுவது வியப்புக்குரியதோ அல்லது வெறுப்புக்குரியதோ அல்ல. இந்த உண்மைகளையெல்லாம் கேள்வி கேட்கும் அன்பர் முதலில் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

தோழர், கே. ஆர். இராமசாமியின் அண்ணன், "திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு" செய்துகொள்ளவில்லை. 'திருமணமே' செய்து கொண்டார்! திருமணத்தின் விளைவாக ஒரு குழந்தையும் பிறந்தது! இப்படிப்பட்ட ஒரு திருமணத்திற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமைதாங்கியது கொள்கைக்கு மாறுபாடானது என்று எந்த நல்லறிவுடையோரும் கூறத்துணியார்.

கேள்விகேட்கும் நண்பர், பெரியார் அவர்கள் திருமணம் செய்துகொண்டதாகக் குறிப்பிடுகிறார். பெரியார் அவர்கள், 'திருமணம்' செய்து கொள்ளவில்லை; அவர், "திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு"தான் செய்துகொண்டார் என்பதை அந்த நண்பர் உணர்ந்துகொள்ளுதல்வேண்டும். பெரியாரின் திருமணம், உலகோர் கொள்ளும் முறைப்படி ஒரு திருமணமாக இல்லாமல், அது ஒரு ஏற்பாடாக இருந்த காரணத்தால், அதனைப் "பொருந்தாத் திருமணம்" என்று சொல்லவேண்டிய இன்றியமையாமையும், அந்த ஏற்பாடு சனநாயகத்துக்கு மாறுபாடானவகையில் இயக்கத்தோடு தொடர்பு படுத்தப்பட்டிருந்த காரணத்தால், அதனை எதிர்த்துத்தீரவேண்டிய இன்றியமையாமையும் அறிஞர் அண்ணா அவர்கள் உள்ளிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தோர் அனைவர்க்கும் ஏற்பட்டன.

எனவேதான் பெரியாரின் "பொருந்தாத் திருமணத்தோடு," தோழர், கே. ஆர். இராமசாமியின் அண்ணனின் "பொருந்தும் திருமணத்தை" ஒப்பிட்டுப் பார்ப்பது எந்தவகையிலும் பொருத்தமுடைய செயல் ஆகாது.

பெரியாரின் "திருமண ஏற்பாட்டை" மேலிருந்தவாரியாகப் புரிந்துகொண்ட பொது மக்கள் அதனை எள்ளிநகையாடியதற்குக் காரணம், ஆணின் 72 வயது என்பது பொதுவாகத் திருமணத்திற்கு உரித்தான ஒரு வயது அல்ல, காலங்கடந்த வயது என்பதேயாகும். மாப்பிள்ளையின் 72 வயது என்பது, பொதுவகாப் பொதுமக்களின் வியப்பிற்கும் வெறுப்பிற்கும் ஆளானதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் பெரியாரின் திருமணத்தை வயதைமட்டும் வைத்துக்கொண்டு 'பொருந்தாத் திருமணம்' என்று கூறிவிடவில்லை; அந்நாடுத் "திருமணம் என்ற பெயரால் செய்யப்பட்ட ஏற்பாட்டை"யும் உள்ளடக்கித்தான் 'பொருந் தாத் திருமணம்' என்று கூறினார்கள்.

❖ ❖ ❖

வினா : மொகஞ்சதாரோ ஆரப்பா முதலிய புதையுண்ட நகரங்களின் நாகரிகம் ஆரிய நாகரிகமா? திராவிட நாகரிகமா?

விளக்கம் : சர் சாண் மார்சல் (Sir John Marshal) ஈராசுப் பாதிரியார் (Father Heras) போன்ற புதைபொருள் ஆராய்ச்சி அறிவுத் திறனும், வரலாற்றாராய்ச்சி அறிவுத் திறனும் பெற்றவர்கள் நடுநிலைமை நின்று ஆராய்ந்து, மொகஞ்சதாரோ—ஆரப்பா நாகரிகம் திராவிட நாகரிகமே என்று நிலைநாட்டியுள்ளனர்.

அதனைத் திராவிட நாகரிகம் என்று ஒப்புக்கொள்ள மனவிருப்பங் கொள்ளாதவர்கள், அதனை ஆரிய நாகரிகம் என்று நிலைநாட்ட அரும்பாடுபட்டுப் பார்க்கின்றனர். ஆனால் போதுமான காரணகாரிய விளக்கங்களைத் தரமுடியாமலும், மார்சல்—ஈராசும் போன்றோரின் கருத்துக்களை மறுத்துக்கூற முடியாமலும் திணறிப்போய் வேறு ஏதேதோ உளறிக் கொட்டுகின்றனர். நல்லறிஞர்களின் முன்னால் அவர்களின் கூற்றுக்கள் நிற்க முடிவதில்லை.

மொகஞ்சதாரோ—ஆரப்பா ஆகிய புதையுண்ட நகரங்களில் காணப்படும் வீடுகளின் அமைப்பு, பண்டங்களின் தோற்றம், அணிகலன்களின் அமைப்பு, மொழியின் தன்மை ஆகிய எல்லாம் திராவிட நாகரிகத்தை ஒட்டியனதாகவே காணப்படுவதால் அதனைத் திராவிட நாகரிகம் என்று முடிவு கட்டவேண்டியிருக்கிறது என்றும் நடுநிலை நின்று ஆராய்ந்த ஈராசுப் பாதிரியார் கூறுகிறார்.

எனவேதான் மொகஞ்சதாரோ—ஆரப்பா நாகரிகம் திராவிட நாகரிகமே என்ற முடிவுக்கு நாமும் வரவேண்டியிருக்கிறது.

❖ ❖ ❖

வினா : திராவிட நாகரிகமானால் அங்கு கண்டெடுக்கப் பட்ட சிவலிங்க உருவங்கள் ஆரியர்கள் வருவதற்கு முன்பு நமக்கு உருவ வழிபாடு உண்டு என்பதை நிரூபிக்கவில்லையா?

விளக்கம். தமிழகத்தில் வாழ்ந்த பண்டைத் தமிழர்களுக்கும் சரி, திராவிடத்தில் வாழ்ந்த பண்டைத் திராவிடர்களுக்கும் சரி, திராவிடப் பகுதிகளாக இருந்து மறைந்த பிற திராவிடப் பகுதிகளில் வாழ்ந்த திராவிடர்களுக்கும் சரி உருவ வழிபாடு அறவே இல்லை என்று நாம் கூறவில்லை. இருக்கவே செய்தது.

உருவ வழிபாடு, காட்டுமிராண்டிக் காலத்திலிருந்தே உலகின் எல்லா நாட்டுக் காட்டுமிராண்டிகளிடத்திலும் இருந்து வந்த—இருந்து வரும் பழக்கமேயாகும்.

உருவ வழிபாடு, ஆரியர்கள் வருவதற்கு முன்பே திராவிடரிடத்துக் காணப்பட்டது என்பதை நாம் மறுக்கவில்லை. மொகஞ்சதாரோ—ஆரப்பாவில் சிவலிங்க உருவங்கள் கண்டெடுக்கப்பட்டிருப்பதால், அங்கெல்லாம் சிவலிங்க வழிபாடு இருந்திருக்கவேண்டும் என்ற கருத்தையும் நாம் மறுக்கவில்லை.

சிவலிங்கத்தைப்போன்ற உருவங்கள் மொகஞ்சதாரோ—ஆரப்பாவில் மட்டுமல்ல, ஏறத்தாழ எல்லா நாடுகளிலும் காட்டுமிராண்டிக் காலத்திலிருந்தே இருந்து வருகின்றன என்று தெரியவருகின்றது. 'லிங்கம்' என்பதற்கு 'ஆண்குறி' என்று பொதுவாகப் பொருள் கூறப்படுகிறது. அதன் உருவ அமைப்பைப் பார்த்தாலும் ஆண்குறி வடிவாகவே அமைந்திருப்பதைக் காணலாம். பிற நாடுகளில் கண்டெடுக்கப்பட்டிருக்கும் உருவங்களைப் பார்த்தாலும், அவைகள் இன்னும் தெளிவாகவே ஆண்குறியின் வடிவத்தைத் தாங்கியிருக்கின்றன என்று கூறலாம். ஆண்

குறியை வழிபடுவது என்பது, தமிழகத்தின்—திராவிடத்தின் காட்டுமிராண்டிக் காலத்தி லிருந்து மட்டுமல்ல, ஏறத்தாழ எல்லா நாடு களின் காட்டுமிராண்டிக் காலத்திலிருந்தே வழக்காற்றில் இருந்துவருகிறது என்று தெரியவருகிறது. ஆண்குறி வழிபாடு உலகு எங்கணும் இருந்துவந்திருக்கிறது என்பதற் கான சான்றுகள் பல ஆங்காங்குக் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

ஆண்குறியின் வழிபாடு என்ன காரணத் தாலோ எல்லா நாட்டுக் காட்டுமிராண்டி களிடத்திலும் இருந்து வந்திருக்கிறது. தன்னைப்போன்று வேறோர் உருவம் உற்பத்தி ஆவதற்கு ஆண்குறி காரணமாக இருப்பதை அறிந்துகொண்ட காட்டுமிராண்டி மனிதன் அந்த உறுப்பைக் கண்டு வியந்து, அதனி டத்து மதிப்புசெலுத்தி, அதனைப்போற்றிப் பாராட்டி, அதனைப்போன்று உருவம் அமைத்து வழிபடத் தொடங்கினான் போலும்! உற்பத்திசெய்யும் ஆற்றலுள்ளதாக இருப்ப தாலும், நேரடியாக எளிதாக மனிதனால் அறிந்துகொள்ளக்கூடிய தன்மை வாய்ந்த தாக இருப்பதாலும் எடுத்தவுடனேயே வியப் பும், மதிப்பும், பாராட்டுதலும், வழிபாடும் செலுத்தக்கூடிய ஒன்றாக ஆண்குறியைக் காட்டுமிராண்டிக் காலத்து மனிதன் கொண் டான்போலும்! நாளடைவில் நாட்டிற்கு நாடு, காலத்திற்குக்காலம் அந்த 'உருவத்தை'ப் பொறுத்துக் கருத்துக்களும், கதைகளும் கற்பிக்கப்பட்டனபோலும்.

" ஆண்குறி வழிபாடு " (Phallic Worship) என்ற ஆங்கில நூலில் பல்வேறு நாடுகளின் 'லிங்கங்' களின் உருவங்கள் அப்படியே படங்களாகப் பிடித்துப் போடப்பட்டிருக்கின்றன. அவை பற்றிய வழிபாடுகளும் அந்நூலில் தெள்ளத் தெளிய விளக்கப்பட்டிருக்கின்றன.

ஆங்கில அகராதியைப் (Chambers's Twentieth Century Dictionary) புரட்டிப்பார்த்தால் ஆண்குறி (லிங்கம்) வழிபாடுபற்றிய குறிப்பு களைக் காணலாம். Phallus என்ற சொல் லுக்கு The symbol of generation which figures in the rites and Ceremonies of primitive peoples (காட்டுமிராண்டி மக்களின் சடங்குகளி லும் விழாக்களிலும் உருவம் தாங்கிநிற்கும் உற்பத்தியின் அடையாளமாகும்) என்றும், The Penis (ஆண்குறி) என்றும் The Organ of Sex (பாலுணர்த்தும் உறுப்பு) என்றும் பொருள் கூறப்பட்டிருக்கின்றது. Phallism என்பதற்கு Phallic Worship (ஆண்குறி வழி பாடு) என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

எனவே உலகு எங்கணும் காட்டுமிராண்டிக் காலத்திலிருந்தே காணப்பட்ட லிங்கவழிபாடு, மொகஞ்சதாரோ—ஆரப்பா நாகரிகக் காலத் திலும் காணப்பட்டதில் வியப்பொன்று மில்லை, ஆரியர்கள் வருவதற்கு முன்பே உருவ வழிபாடு இருக்கிறது என்பதை நாம் மறுக்கவில்லை.

❖ ❖ ❖

வினா : இத்திரு உருவங்களைப் பண்டைத் திராவிடர் கள் கோயிலில் வைத்துத்தானே வழிபட்டிருக்க வேண்டும் ?

விளக்கம் : கடவுள் உருவங்களுக்குப் பொன் னும் பொருளும், போகமும் நிறைந்த பெருங் கோயில்கள் கட்டும் முறை பிற்காலத்தில் வளர்ந்தது என்றுதான் சொல்லவேண்டும், இப்பொழுது நாம் காணும் பெருங்கோயில்கள் போன்று பண்டைக் காலத்தில் இருக்க வில்லை இந்நாட்டில் என்பது மட்டும் கண்கூடு.

பண்டைக்காலத்தில் கடவுள் உருவங்கள் மரத்தடியிலும், மலையுச்சியிலுந்தான் வைக்கப் பட்டிருந்திருக்கின்றன. அரசமரம், ஆலமரம், தில்லைமரம், கடம்பமரம், வில்வமரம், புன்னை மரம் போன்ற மரங்களின் நிழலடியில்தான் பெரும்பாலான கடவுள் சிலைகள் அந்தக் காலத்தில் உட்கார்ந்திருக்கின்றன. தில்லைக் கோயிலும், மதுரைக் கோயிலும் ஒரு காலத் தில் மரத்தடிகளாக இருந்தவைகள் தாம். சிற்சில இடங்களில் சிறு குடிசைகளிலும், சிறுமண்டபங்களிலும் கடவுள் உருவங்கள் வைக்கப்பட்டிருந்தனவாக அறியவருகின்றன.

கடவுள் உருவங்களுக்குப் பண்டைத் தமி ழகத்தில் சிறுசிறு கோயில்களும், மன்றங் களும் இருந்திருக்கின்றன என்பதை நாம் யாரும் மறுக்கவில்லை!

❖ ❖ ❖

வினா : எனவே கோயில்களும் உருவ வழிபாடுகளும் ஆரியர்களால் புகுத்தப்பட்டன என்பது பொருந் துமா ?

விளக்கம் : கோயில்களும் உருவ வழிபாடு களும் ஆரியர்களால் தான் புகுத்தப்பட்டன என்று யாரும் கூறவில்லை; ஆரியர்களாலும் புகுத்தப்பட்டன என்றுதான் கூறுகிறோம்! →

அறிவுப்புதிர் - 1.

மனிதன் தன் வாழ்நாளில் பலவற்றைப் பற்றி அறிந்துகொள்கிறான். எப்பொழுதும் அவன் தன்னை விட மற்றவற்றைப் பற்றி அதிகம் தெரிந்துகொள்பவனாகக் காணப்படுகிறான்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் சரியானவைதானா அல்லது தவறுடையவையா என்று உங்களால் கூறமுடியுமா என்று பாருங்கள். சரியானவை என்றால் 'சரி' என்பதற்குப் பக்கத்தில் ஒரு X குறியிட்டுக்கொள்ளவும் தவறுடையவை என்றால் 'தவறு' என்பதற்குப் பக்கத்தில் ஒரு X குறியிட்டுக்கொள்ளவும்: உங்கள் விடைகளை இந்தப் பக்கத்தில் கட்டத்தில்காணும் விடைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

1. நீங்கள் மூச்சுவிடும் காற்றில் பிராண வாயுவைவிட கரியமிலவாயு அதிகம் அடங்கி இருக்கின்றது.

சரி...... தவறு......

2. உடம்பின் மேற்பரப்பிற்கு இரத்தத்தைக் கொண்டுசெல்லும் இரத்தக் குழாய்களை சுருக்கும் தன்மை புகையிலைக்கு உண்டு.

சரி...... தவறு......

3. நீங்கள் காணும் சினிமாக் காட்சிகளில் ஒவ்வொரு விநாடியிலும் பல தடவைகள் திரையில் படம் தோன்றுது.

சரி...... தவறு......

4. உங்கள் உடல் வளர்ச்சிக்குத் தேவையான வைடமின் சத்துக்கள் உணவு, மருந்து இவைகளிலிருந்து மட்டும்தான் கிடைக்கின்றது.

சரி...... தவறு......

5. ஒரு கலத்திலுள்ள தண்ணீர், உங்களுக்கு ஒரே சமயத்தில் குளிர்ச்சியாகவும் வெப்பமாகவும் இருப்பதாகத் தோன்றலாம்.

சரி...... தவறு......

6. நீங்கள் உட்கொள்ளும் உணவில் பெரும் பகுதி உங்கள் வயிற்றிலேயே செரிக்கின்றது.

சரி...... தவறு......

7. நீங்கள் காணும் பொருள்களின் உருவங்கள் உங்கள் கண்ணில் தலைகீழாக விழுகின்றன.

சரி...... தவறு......

சரியானவை : 2, 3, 5, 7. தவறானவை : 1, 4, 6

உங்கள் விடைகள் இதற்குச் சரியா ? விடைகளுக்குரிய விளக்கம் உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் அடுத்த இதழில் விளக்கங்களைக் காணலாம்.

இன்றுள்ள கோயில்களிலுள்ள கடவுள் உருவங்களில் பலவும் (மதுரைவீரன், சங்கிலிக் கறுப்பன், காட்டுமிராண்டிக் காலத்து ஆண்குறி (லிங்கம்) போன்ற சில தவிர), அவைபற்றிய புராணங்களும், சாத்திரங்களும், சம்பிரதாயங்களும், அவற்றிற்குச் செய்யப்படும் சமத்கிருத அர்ச்சனைகளும் ஆரியர்களால் புகுத்தப்பட்டனவாகும் என்றுதான் சொல்லுகிறோம். உலகிலுள்ள பல நாட்டினர்க்கு தனித்தனி வழிபாட்டு முறைகள் இருப்பதைப்போல், தமிழர்க்கு என்று தனி வழிபாட்டு முறைகள் இருந்திருக்கக்கூடும். ஆனால் இன்று கொள்ளப்படும் முறைகளிலே பலவும் ஆரியரால் புகுத்தப்பட்ட முறைகள் என்பதை யார்தான் மறுக்கமுடியும்? உண்மை நிலை விளக்கத்திற்காக இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிறோம்.

ஆனால் வழிபாட்டுமுறைகள் ஆரிய முறையாக இருந்தாலும் சரி, அல்லது அவை பண்டைத் தமிழ்நாட்டு முறையாக இருந்தாலும் சரி, அவை காலத்தோடு ஒட்டிய கருத்துக்கு ஒவ்வாமல், பகுத்தறிவுக்கு முரண்பட்டனவாய்த், தேவையற்றனவாய் இருக்குமேயானால் அவை அத்தனையையும் ஒதுக்கித்தள்ளவே பகுத்தறிவுவாதிகள் விரும்புகிறார்கள் என்பதைக் கேள்வி எழுப்புவோர் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்-ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்"

மலர் - 2 1953 - 54

மலர் - 3 1954 - 55

24 இதழ்கள் கொண்ட பைண்ட் செய்யப்பட்ட மலர்கள்
ஒவ்வொன்றும்

விலை ரூ. 8 0 0
(தபாற்செலவு உட்பட)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.
வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 10 வீதம் அனுப்பவேண்டும்.)

விபரங்கட்கு :

"மன்றம்"
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
... 26, Nainiappan St. Mannadi, MADRAS-1.